பக்கங்கள்: 13

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 புரட்டாதி 21 சனிக்கிழமை 08.10.2022 கதிர் 335

**இனி இது ரகசியம் அல்ல!**

நேற்று பிள்ளையான் குறித்து சுமந்திரன் நாடாளுமன்றில் ஆற்றிய உரையிலிருந்து கருத்து வெளியிட்டிருந்தேன்.

இன்றும் சுமந்திரனின் இன்னொரு நாடாளுமன்ற உரையை ஒட்டிய ஒரு

2

# இலங்கையை எவரும் நம்பார்

## வாக்குறுதி கொடுத்து மீறுவதே நம் வேலை என பீரிஸ் விசனம்



**கொழும்பு,ஒக்ரோபர். 08**

**இலங்கையின் பொறுப்புக்கூறல் விடயத்திலும், நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் வேலைத்திட்டத்திலும் நாம் இதுவரை காலம் கொடுத்த வாக்குறுதிகள் அனைத்துமே மீறப்பட்டுள்ள நிலையில், எதிர்காலம் குறித்து இலங்கை வழங்கும் வாக்குறுதிகளை எவரும் நம்பப் போவதில்லை என முன்னாள் வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.**

11

## ஜெனிவாவில் இலங்கைக்கு பலத்த அடி என்கிறார் சஜித்



ஜெனிவா மனித உரிமைகள் கவுன்ஸிலில் கொண்டு வரப்பட்ட இலங்கை தொடர்பான பிரேரணை நிறைவேற்றப்பட்டுள்ளதுடன், இது ஒரு நாடு என்ற வகையில் பாரிய பிரச்சினையாகும் எனவும், சர்வ தேசத்தை வென்றதாக கூறிக் கொள்ளும் அரசாங்கத்திற்கு

11

## பிணங்களின் மேல் நின்று ஆட்சி என்கின்றார் அனுர!



பிணங்களின் மேல் நின்று, இரத்த ஆற்றில் ஆட்சி செய்ய நீங்கள் முயற்சி செய்கிறீர்கள் என நாடாளுமன்ற உறுப்பினர் அனுரகுமார திசாநாயக்க தெரிவித்தார்.

நேற்றைய சபை

11

## ஏழாம் அறிவு நபரால் 22 க்கு தடை என வீரவன்ஸ விசனம்



அரசமைப்பின் 22 ஆவது திருத்தச்சட்ட மூல விவாதம் பிற்போடப்பட்டுள்ளமை அரசாங்கத்தின் தன்னிச்சையான தீர்மானமாகும்.

ஏழு அறிவுடையவர் என வர்ணிக்கப்பட்டவர் அமெரிக்காவிலிருந்து கொண்டு அவரது

11

## 22 ஆவது திருத்தம் 20,21 இல் விவாதம்

அரசமைப்பின் 22 ஆவது திருத்தச் சட்டமூலத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தை எதிர்வரும் 20 ஆம் மற்றும் 21 ஆம் திகதிகளில் நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நேற்று நடைபெற்ற நாடாளுமன்ற விவகாரங்களுக்கான குழுவின் கூட்டத்தின் போதே சபாநாயகர் மேற்கண்டவாறு புதிய திகதிகள் பற்றிய தகவலைத் தெரிவித்தார்.

## நட்பு நாடுகள் கைவிட்டாலும் நாம் தனித்து விடப்படவில்லை

### பிரதமர் நேற்று சபையில் சமாளிப்பு உரை



எமது நட்பு நாடுகள் ஜெனிவாவில் எமக்கு ஆதரவாக வாக்களிக்கவில்லை என்பதற்காக அவர்களால் நாம் தனித்து விடப்பட்டுள்ளோம் என அர்த்தப்படாது. ஜெனிவா தீர்மானத்தில் அவர்களின் முடிவுகள் எதுவாகஇருந்தாலும், இந்தநாடுகள் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இலங்கையுடன் முன்னெடுக்கும் வர்த்தக மற்றும் உதவித் திட்டங்களை நிறுத்திக்கொள்ளவில்லை என பிரதமர் தினேஷ் குணவர்தன சபையில் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று ஜெனிவா கூட்டத்தொடர் குறித்த கேள்விகளுக்கு பதில்

11

## வவுனியாவில் மின்னல் தாக்கி பெண் பலி



வவுனியாவில் நேற்று மாலை 5.30 மணியளவில் மின்னல் தாக்கி பெண் ஒருவர் மரணமடைந்துள்ளார் என மாமடு பொலிஸார் தெரிவித்தனர்.

11

## ஏ.எல்., புலமைப் பரிசில் பரீட்சைகள் ஒத்திவைப்பு

2022 ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சை மற்றும் 2022 ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுச் தராதர உயர்தரப் பரீட்சை ஆகியவை ஒத்திவைக்கப்பட்டுள்ளன என இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

அதன்படி, உயர்தரப் பரீட்சை 2023 ஜனவரி 23 முதல் பெப்ரவரி 17 வரை நடைபெறும் என தெரிவிக்கப்படுகின்றது.

11

## குருந்தூர்மலையில் தொடர்ந்து அடாவடி

### கஜேந்திரகுமார் சபையில் விசனம்

முல்லைத்தீவு குருந்தூர்மலை தொடர்பில் தொடர்ந்தும் அத்துமீறல்கள் இடம்பெற்று வருகின்றன எனத் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்,

11



## ஓட்டோச் சாரதி வாள்வெட்டுக்கு இலக்கானார்

யாழ்ப்பாணம் – கொக்குவில் பகுதியில் ஓட்டோச் சாரதி மீது வன்முறை கும்பல் ஒன்று வாள்வெட்டு தாக்குதலை மேற்கொண்டுள்ளது. அச்சுவேலி பகுதியை சேர்ந்த செ. ரதீஸ்குமார் (வயது 41) என்பவரே தாக்குதலுக்கு இலக்காகி படுகாயமடைந்த நிலையில் சிகிச்சைக்காக

11

# இந்திய எல்லைக்குள் தப்பிச் சென்ற அகதிகள் மீது அத்துமீறிப் புகுந்து இலங்கைக் கடற்படை சுட்டதா?

## ஒருவரைக் காணோம்; தமிழகத்தில் பரபப்பு

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், ஒக்.07

இந்தியாவுக்குள் தஞ்சம் புகுந்த இலங்கைத் தமிழ் அகதிகள் மீது இந்திய எல்லைக்குள் நுழைந்து இலங்கைக் கடற்படை துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொண்டதாக வெளியான செய்திகளால் தமிழகத்தில் பரபரப்பு நிலவுகின்றது.

மன்னார் தாழ்வுப்பாட்டில்ல இருந்து 5ஆம் திகதி மாலை புறப்பட்டு 5 ஆம் திகதி இரவு 7.30 மணிக்கு இந்தியாவிற்குச் சொந்தமான தீடையில் 6 பேர் தஞ்சம் அடைந்துள்ளனர்.

இவ்வாறு தீடையில் நிற்பவர்களை 6ஆம் திகதி அதிகாலை இந்திய மீனவர்கள் அவதானித்து தமிழக காவல் துறையினருக்கு தகவல் வழங்கியபோதும் அங்கே தேடுதல் மேற்கொள்ளப்பட்டது. அகதிகள்

11

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது ....................

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடயத்தைத்தான் சுட்டிக்காட்ட முன் வருகிறேன்.

நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் ஒத்திவைப்பு வேளைப் பிரேரணையை ஒட்டி சுமந்திரன் குறிப்பிட்ட சில கருத்துக் களை சிலாகித்து இந்த தகவல் தெறிப்பு.

ராஜபக்ஷக்கள் ஆட்சி நாட்டுக்கு வந்த காலத்தில் 'கொமிஷன் மன்னர்' ஒருவர் பற்றி பேச்சு வந்தது.

அப்போதெல்லாம் அரசின் கேள்விப்பத்திரங்கள் எல்லாவற்றிலும் 10 வீத தரகு அவருக்குச் செலுத்த வேண்டும் என்று உயர் மட்டத்தில் பேசிக் கொண்டனர்.

முதலில் ஆலோசகராக நுழைந்த அவருக்கு அரசின் சகல வேலை திட்டங்களில் இருந்தும் 10 வீதம் கட்டாயம் செலுத்தியாக வேண்டும் என்பதால் அவரை பொதுவாக அரசியல் வட்டாரங்களில் 'மிஸ்டர் டென் பேர்சண்ட்' என்று அழைத்தார்கள். அதை நானும் நன்கு அறிந்தும், தெரிந்தும் இருந்தேன்.

பின்னர் இந்த பத்து வீதம் 25 வீதமாக உயர்ந்ததாகவும் கதை அடிபட்டது.

ஆனால் நேற்று நாடாளுமன்றத்தில் பேசிய சுமந்திரன் அது பத்து வீதம் அல்ல, உண்மையில் நூறு வீதம். அரசு திட்டத்தின் செலவினத்தில் சரி பாதி அவருக்குத் தரகுப் பணமாக கொடுக்க வேண்டியிருந்தது, அதனால்தான் நாடு இத்துணை வேகத்தில் வீழ்ச்சி கண்டது என்ற உண்மையை போட்டு உடைத்தார்.

இன்னொரு விடயத்தையும் சுமந்திரன் சொன்னார்.

இரசாயன உரங்களுக்குத் தடை என்பது போன்ற சிக்கலான பிரச்சினைகளில் கண்மூடித்தனமாக முடிவு எடுத்துவிட்டு, பின்னர் அந்த முடிவை மாற்றுவதில் GR (கோட்டாபய ராஜபக்ஷ) தனக்கு நிகர் தானே என்பதை அவரது பெயரை வைத்தே கிண்டல் பண்ணினார் சுமந்திரன். GR என்றால் Gear Reverse (ரிவர்ஸ் கியர்) என்றார் சுமந்திரன்.

அந்த நோய் புதிய ஜனாதிபதி ரணிலுக்கும் வந்துவிட்டது. அவரும் உயர் பாதுகாப்பு வலயம் என்ற வர்த்தமானி அறிவித்தலை அவசர அவசரமாக வெளியிட்டார். அதன் சட்ட, நியாய வலிமையை அறிந்து கொண்ட பின்னர் அதை இப்போது அவரே விலகிக் கொண்டுள்ளார். அவரது ஆட்சியும் GR (ரிவர்ஸ் கியர்) ரகம்தான் என்றார் சுமந்திரன்.

அதுதான் நிலைமை என்றால் நாடு முன்னேறப் போவதில்லை. ரிவர்ஸ் கியரில் பின்னோக்கி நகர்ந்து குட்டிச் சுவராகப் போகிறது என்பதுதான் நிலைமை.

முதல் கியர், இரண்டாவது கியர் என்று தொடங்கி, ரொப் கியர் வரை நாட்டை வேகமாக முன்னகர்த்த ஓர் உறுதியான தலைமையும், அதற்கான நாடாளுமன்றமும் கிடைக்காத வரை, நாடு இந்த அதல பாதாள நிலைமையில் இருந்து விடுபட்டு மேலே வரப்போவதில்லை என்பது நிச்சயம்.

- மின்னல் -

விளம்பரத் தொடர்புகளுக்கு - தொலைபேசி இலக்கம் - 076 443 8622











**மாணவர்களுக்கான புதிய கற்கை நெறிகள் 17.10.2022 ஆரம்பமாகின்றன.**

**Civil Draftsperson (NVQ level 4) course – 1 year**
Minimum Qualification Passed G.C.E.(O/L) with pass in Mathematics & English
**Course leads to:**
» Follow course in NVQ level 5
» Register for drawings at local councils

**Computer Certificate Courses** *( 3 – 4 months Part time)*
» Certificate in MS OFFICE – (MS Word, Excel, Access & PowerPoint)
» Certificate in Graphic Designer – (PageMaker, PhotoShop & CorelDraw
» Web Designing(HTML, CSS, JAVA Script, PHP, MYSQL)
» AutoCAD 2D & 3D Modeling
» Java, C++ Programming
» Accounting Package Tally

**Our Civil Draftmanship & Computer courses will be held in our Jaffna centre along 464 Hospital Road, Jaffna too**

**Certificate in Craft Courses** (6 மாதங்கள் முழு நேரம் -தமிழ் மொழி மூலம்)
» அலுமினியம் பொருத்துதலும், இணைத்தலும் -Aluminum Fabrication

**மூன்றாம் நிலை தொழிற்கல்வி ஆணைக்குழுவில் பதிவு செய்யப்பட்டது. (TVEC ) பதிவு இலக்கம் : P25/0014, Facilities : Sports**

For More Information : DIRECTOR
**JAFFNA COLLEGE INSTITUTE OF TECHNOLOGY**
**VADDUKODDAI, JAFFNA , SRI LANKA.**
**Tel :0212223382/0212250975 E-mail: ejcit@sltnet.lk**

V2 Travels and Tours

V2 TRAVELS இன் ஊடாக பதிந்து அமெரிக்கா சென்றவர்களின் விசா வென்ற வெற்றிக்கதைகளை எமது V2 Travels and Tours என்ற Facebook பக்கத்தில் பார்வையிடலாம்.

இந்த அதிஸ்டத்தினை நீங்களும் பயன்படுத்துங்கள். மற்றவர்களுக்கும் பகிருங்கள். இதன்மூலம் நீங்களோ உங்கள் அன்புக்குரிய நண்பர்கள்,உறவினர்கள் என அனைவரும் உங்கள்மூலமாக இந்த அதிஸ்டத்தினை பெற இந்த தகவலினை பகிருங்கள்.

# அமெரிக்க லொத்தர் விசா

## நீங்களும் அமெரிக்காவில் குடும்பத்துடன் வாழலாம்...

ஒரு உறுதியான முடிவு உங்கள் வாழ்க்கையை மாற்றிவிடும்!






அலுவலர்களின் நன்மை கருதி சனி, ஞாயிறு உட்பட இரவு 7 மணிவரை பதிவுகள் மேற்கொள்ளப்படும்

மிக மிக அரிய சந்தர்ப்பம் தவறவே விடாதீர்கள்

அலட்சியம் வேண்டாம்

கடந்த காலங்களில் வாய்ப்புக்களை தவறவிட்டு விண்ணப்பிக்காதவர்கள் அப்படியே இருக்க நம்பிக்கையுடன் எம்மூடாக விண்ணப்பித்தவர்கள் விசா பெற்று அமெரிக்கா சென்றுவிட்டார்கள்.

நீங்கள் கூட அதிஸ்டசாலியாகலாம்

ஆச்சரியம்! ஆனால் உண்மை.

18 வயதிற்க்கு மேற்பட்ட யாரும் விண்ணப்பிக்கலாம்

அனைவருக்குமான இலவச சந்தர்ப்பம்

திருமணமானவர்களுக்கு ஒரே நேரத்தில் இரண்டு வாய்ப்புக்கள்

இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேற ஓர் அரிய சந்தர்ப்பம்

படித்தவர்கள், பட்டதாரிகள், அரச வேலை செய்பவர்கள், தனியார் துறையில் வேலை செய்பவர்கள், வேலையில்லா பட்டதாரிகள், A/L பரீட்சை எடுக்கும் மாணவர்கள், வெளிநாட்டில் படிக்க விரும்பும் மாணவர்கள் அனைவருக்கும் இது அரிய இறுதி சந்தர்ப்பமாகும். பயன்படுத்துங்கள்! பலன் பெறுங்கள்!

இளைஞர்களே, யுவதிகளே வெளிநாடு செல்ல காசில்லையா?

இலட்சக்கணக்கான காசை கொடுத்து ஏமாறுவதற்கு பதில் இலவசமாக கிடைக்கும் 55'000 பேருக்கான அதிஸ்ட வாய்ப்பை தவறவிடுவானேன்?

240 இதுவரை எம்மூடாக விண்ணப்பித்தவர்களுள் 240 பேருக்கு மேல் அமெரிக்காவில் வாழ்கின்றார்கள்.

உங்களுக்கு விசா கிடைத்தால் உங்களுடன் சேர்த்து உங்கள் (காதலன்/காதலி) எதிர்கால வாழ்கைத்துணையையும் அழைத்துச்செல்லலாம்

Love You

**0768226244**
**0768226240**

நீங்கள் தவறவிடும் ஒவ்வொரு கணமும் இன்னொருவருக்கான விசா வாய்ப்பாக அமையும்

பதிவுகளுக்கு Passport தேவையில்லை

முக்கிய அறிவித்தல்

ஒருவிதத்தில் நாம் அனைவரும் அதிஷ்டசாலிகள்தான் கடந்த வருடங்களில் கட்டாயமாக்கப்பட்ட பாஸ்போட் நடைமுறை இந்த வருடம் தளர்த்தப்பட்டுள்ளது.இதன்மூலம் இலங்கையில் உள்ள மக்கள் அனைவரும் பாஸ்போட் இல்லாமலேயே விசா வாய்ப்பினை பெற்றுக்கொள்ளலாம்.

கடைசி 7 நாட்களும் உலகம் முழுவதிலுமிருந்து அதிக விண்ணப்பங்கள் போடப்படுவதால் அமெரிக்க லொத்தர் இணையமானது அடிக்கடி முடங்குவதால் இறுதிக்கட்ட ஏமாற்றங்களை தவிர்க்க, முடிந்தளவுக்கு முன்னரே பதியுங்கள்.

விண்ணப்ப முடிவு திகதி - 08-11-2022

EMERGENCY ALERT சிந்தியுங்கள்!!! உடனடியாக பதிவுசெய்யுங்கள்!

பதிவுகள் நடைபெறும் எமது கிளைகள்-விபரங்களுக்கு அழையுங்கள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| யாழ்ப்பாணம் | -0777068777 | திருகோணமலை | - 0768226237 | கிளிநொச்சி | -0768226240 |
| நெல்லியடி | -0776699892 | கொடிகாமம் | - 0764550675 | சாவகச்சேரி | -0768226242 |
| புதுக்குடியிருப்பு | -0764550673 | சுன்னாகம் | - 0764550670 | மானிப்பாய் | -0768226238 |
| கோப்பாய் - | -0768226238 | புத்தூர் | - 0764550671 | பருத்தித்துறை | -0768226230 |
| வல்வெட்டித்துறை | -0776697960 | பண்டத்தரிப்பு | -0777718322 | சங்கானை | -0777726322 |

கொழும்பு (வெள்ளவத்தை) - 0777469777

வெளிமாவட்டங்கள்- 0768226236

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## ஜெனிவா பயன் தருமா?

ஜெனிவாத் தீர்மானத்தை அடுத்து, அதை ஒட்டி, இரு எதிரெதிர் தரப்புகளின் பிரதிநிதிகள் வெளியிட்ட கருத்துக்கள் நோக்கற்பாலவை.

முதலாவது – நாடு கடந்த தமிழீழ அரசின் பிரதமர் வி. உருத்திரகுமாரன் தெரிவித்த கருத்து.

“சிறிலங்கா தொடர்பில் ஜெனிவா ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம், சிறிலங்காவுக்கு தோல்வியாக இருந்தாலும், தமிழர்களுக்கும் வெற்றியல்ல. தமிழர்களுக்கு எதிரான பாரிய மனித உரிமை மீறல்களுக்கான பொறுப்புக் கூறலுக்கு இத்தீர்மானம் வழிசமைக்கவில்லை என்பதோடு, தமிழர் தாயகத்தை ஆக்கிரமித்து நிற்கின்ற சிறிலங்காவின் இனப்படுகொலை இராணுவமானது, பொறுப்புக்கூறலுக்கான அச்சமேதுமின்றி, தமிழர்களுக்கு எதிரான தனது பாரிய மனித உரிமை மீறல்களைத் தொடரவே வழிசெய்துள்ளது” – என்று உருத்திரகுமாரன் குறிப்பிட்டு இருக்கிறார்.

அதேசமயம் அரசின் முக்கிய அமைச்சர்களில் ஒருவரான ஹெகலிய ரம்புக்வெல வேறு விதமாக கருத்து தெரிவித்திருக்கின்றார்.

“ஜெனிவா செல்வதன் ஊடாகத் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியாது.

“நாட்டில் இன, மத ரீதியான பிரச்சினைகள் இருந்தால் அவற்றைப் பேசித் தீர்க்க வேண்டும்.

“பிரச்சினைகளுக்குப் பேச்சு மூலம் உடனடியாகத் தீர்வு வழங்க வேண்டும் என்பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும், பிரதமர் தினேஷ் குணவர்த்தனவும் மிகவும் அக்கறையாக உள்ளனர்.

“எனவே, தமிழ் மக்களின் பிரதிநிதிகளான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர், அரசு மீது நம்பிக்கை வைத்து நெருங்கிச் செயற்பட வேண்டும்.

“அதை விடுத்து அவர்கள் தொலைவில் இருந்து கொண்டு – எதிர்க்கட்சியினருடன் கைகோர்த்துக் கொண்டு – அரசை விமர்சிப்பதில் எந்தப் பயனும் இல்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் வடக்கு, கிழக்குத் தமிழ் மக்களின் பிரதிநிதிகள். எனவே, தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதற்காக அரசுடன் பேச்சு நடத்த அவர்கள் முன்வர வேண்டும்.” – என்றார் ஹெகலிய ரம்புக்வெல.

இருவரும் கூறிய கருத்துக்கள் உண்மையானவைதான். ஜெனிவா சென்று இலங்கைத் தமிழர்கள் தமது பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ள முடியாது என்பது வாஸ்தவம்தான். ஆனால் இலங்கை தமிழர்களின் நீதி, நியாயமான அபிலாசைகளை நிறைவு செய்யும் விதத்தில், தேசிய இனப் பிரச்சினைக்குத் தீர்வு கண்டு, ஜெனிவாச் சமரை முடிவுக்கு கொண்டு வராமல், விழுந்து கிடக்கும் சிங்கள தேசத்தையும் உள்ளடக்கிய இலங்கை நாட்டுக்கும் மீட்சி கிடையாது என்பதையும் ஹெகலிய போன்றோர் உணர வேண்டும்.

நீதி, நியாயம் செய்யும் பெருந்தன்மை பௌத்த, சிங்களப் பேரினவாதத்துக்கு அடியோடு இல்லை என்ற காரணத்தினால்தான் தமிழர்கள் ஆயுதம் தூக்க வேண்டி நேர்ந்தது. இந்த நாடு இரத்தக் களரியில் மூழ்கும் சூழல் உருவானது. மீள முடியாத அதல பாதாளத்துக்குள் நாடு விழுந்தது.

இது புரிந்தும் – தெரிந்தும் – ஹெகலிய போன்றோர் மாறாக உபதேசம் செய்வது விந்தைதான்.

## குருந்தூர் மலையில் முன்னெடுக்கப்பட்டு வரும் விகாரையின் நிர்மாணப்பணிகளுக்கு தடங்கல் ஏற்படுத்துவது தவறானது!

### விமல் வீரவன்ஸ தெரிவிப்பு



குருந்தூர் மலையில் முன்னெடுக்கப்பட்டு வரும் விகாரையின் நிர்மாணப்பணிகளுக்கு தடங்கல் ஏற்படுத்துவது தவறான செயற்பாடு என நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

ஜெனீவாத் தீர்மானத்தைத் தொடர்ந்து 50 இற்கும் மேற்பட்ட இராணுவ வீரர்களின் பெயர் பட்டியல் மற்றும் பல்வேறு குற்றச்சாட்டுக்கள் அதில் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் அவர் கூறியுள்ளார்.

தாம் அறிந்த வகையில் இந்தத் தீர்மானம் காரணமாக சம்பந்தப்பட்ட நாடுகளால் வழக்கு தொடர்வதற்கான வாய்ப்பும் இருக்கிறது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஒருவேளை, தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்களுக்கு அது வாய்ப்பாகவும் அமைந்துவிடும் எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.

அதனூடாக, குற்றச்சாட்டுகளுடன் தொடர்புடைய இராணுவ உறுப்பினர்களை நிர்க்கதி நிலைக்கு தள்ளிவிடாமல் அவர்களைப் பாதுகாப்பதற்கான வேலைத்திட்டங்களை உருவாக்குங்கள் எனவும் அவர் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

அவ்வாறு இல்லாவிட்டால் இராணுவ வீரர்களுக்கு நெருக்கடி நிலை ஏற்படக்கூடும் எனவும் விமல் வீரவன்ஸ எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அதேபோன்று, குருந்தூர் மலை விகாரை வரலாற்று சிறப்பு மிக்க விகாரை எனவும் அவர் கூறியுள்ளார்.

வடக்கு மற்றும் தெற்கில் ஏதாவதொரு பௌத்த விகாரைகள் இருந்தால் அதுதொடர்பில் பிரச்சினையை ஏற்படுத்துகிறார்கள்.

அதற்கு அப்பால், இந்து போன்ற வேறு சமய தேவஸ்தானங்கள் இருந்தால் அது தொடர்பில் யாரும் கேள்வி எழுப்புவதில்லை எனவும் விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.

ஜெனீவாகூட்டத்தொடர்நெருங்கும்போது, வடக்கு கிழக்கு மக்களின் வாழ்க்கை சீர்குலைந்துவிட்டது அல்லது சமயப் பிரச்சினைகளைக் காரணம் காட்டி நாடகம் அரங்கேற்றுகிறார்கள் எனவும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்களே இவ்வாறான பிரச்சினைகளைத் தோற்றுவிக்கிறார்கள் எனவும் விமல் வீரவன்ஸ குறிப்பிட்டுள்ளார்.

அவர்களே, அகழ்வாராய்ச்சி நடவடிக்கைகளுக்கு சென்ற அதிகாரிகள் மீது தாக்குதலை மேற்கொண்டார்கள்.

குருந்தூர் மலை விகாரையின் நிர்மாணப் பணிகளுக்கு தடங்கல் ஏற்படுத்துவது மிகவும் தவறான விடயமாகும்.

திருகோணமலை போன்ற கோவில் பிரச்சினை தொடர்பாகவும் யாராவது கவனம் செலுத்துகின்றனரா எனவும் விமல் வீரவன்ஸ கேள்வி எழுப்பியுள்ளார்.

## பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு அடிப்படை நாள் சம்பளமாக 2,000 ரூபா?



பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு அடிப்படை நாள் சம்பளமாக 2 ஆயிரம் ரூபா வழங்கப்பட வேண்டுமென்ற யோசனையை தொழிற்சங்கங்கள் மற்றும் சிவில் அமைப்புகளின் கூட்டணி முன்வைத்துள்ளது.

மலையக சிவில் மற்றும் தொழிற்சங்க, வெகுசன அமைப்புகள் இணைந்து ஹற்றனில் நேற்று (வெள்ளிக்கிழமை) நடத்திய கூட்டு ஊடகவியலாளர் சந்திப்பின் போது, இந்த யோசனை முன்வைக்கப்பட்டது.

அத்துடன், மலையக மக்களுக்கான உரிமைகளை உறுதிப்படுத்தப்பட வேண்டும் எனக் கோரிக்கையும் இதன்போது வலியுறுத்தப்பட்டது.

இதில் மலையக மக்களின் காணி உரிமைக்கான இயக்கத்தின் செயற்பாட்டாளர் எஸ்.டி.கணேசலிங்கம், சமூக நீதிக்கான மலையக வெகுஜன அமைப்பின் செயற்பாட்டாளர் இராஜேந்திரன், தோட்ட தொழிலாளர் மத்திய நிலையத்தின் அமைப்பாளர் டீ.மாக்ஸ் பிரபாகரர், ப்ரொடெக்ட் சங்கத்தின் உப தலைவி கறுப்பையா மைதிலி, தோட்ட தொழிலாளர் மத்திய நிலையத்தின் செயலாளர் வசந்தகுமார அபேகோன் ஆகிய பிரதிநிதிகள் கலந்துகொண்டு கருத்துகளை முன்வைத்தனர்.

## ஹரின், கெஹெலிய, அத்தாவுல்லா உள்ளிட்டவர்கள் வசிக்கும் வீடுகளின் பல லட்சம் ரூபா மின் கட்டணம் செலுத்தப்படவில்லை!

### நாடாளுமன்றில் போட்டுத்தாக்கினார் தயாசிறி



நாடாளுமன்ற உறுப்பினர் என்ற வகையில், தமது சிறப்புரிமை மீறப்பட்டுள்ளதாக தயாசிறி ஜயசேகர நாடாளுமன்றத்தில் நேற்று(வெள்ளிக்கிழமை) முறைப்பாடு செய்துள்ளார்.

தான் வசிக்கும் வீட்டின் மின்சாரக் கட்டணம் சுமார் 11 லட்சம் ரூபா நிலுவைகளாக இருப்பதாக கூறி அமைச்சர் காஞ்சன விஜயசேகர நாடாளுமன்றத்தில் தெரிவித்தமை, தமது சிறப்புரிமையை மீறும் செயல் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தான் மாத்திரமே மின்சாரக்கட்டணத்தை செலுத்தவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

எனினும் தாம் வசிக்கும் வீட்டின் மின்சாரக் கட்டணம், தாம் பயன்படுத்திய மின்சாரத்துக்கான கட்டணம் அல்ல எனவும், அது ஏற்கனவே அங்கு வசித்த இரண்டு அமைச்சர்களின் கட்டணங்களும் சேர்ந்தது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, ஹரின் பெர்னாண்டோ, கெஹெலிய ரம்புக்வெல்ல மற்றும் ஏ.எல்.எம் அத்தாவுல்லா போன்ற பலர் வசிக்கும் வீடுகளின் பல லட்சம் ரூபாய் மின்சாரக்கட்டணங்களும் செலுத்தப்படாமல் உள்ளன எனவும் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

எனினும் அந்த கட்டணங்கள் அவர்களின் சொந்த பயன்பாட்டு கட்டணங்கள் அல்ல எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# இரணைமடுக்குளத்தின் பெரும் போகத்துக்கான பயிர்ச்செய்கைக் குழுக் கூட்டம் கிளிநொச்சியில்!



கிளிநொச்சி இரணைமடுக்குளத்தின் பெரும் போகத்திற்கான பயிர் செய்கை குழு கூட்டம் நேற்று (வெள்ளிக்கிழமை) நடைபெற்றது.

காலை 9.30 மணிக்கு மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் தலைமையில் இந்தக் கூட்டம் இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் பயிர்ச்செய்கையின் தற்போதைய நிலை விவசாயத்துடன் தொடர்புடைய திணைக்களங்களால் மேற்கொள்ளப்படும் செயற்திட்டங்கள் விவசாயிகளின் பிரச்சினைகள், உர மற்றும் எரிபொருள் விநியோகம் காப்புறுதி வங்கிகளின் விவசாய கடன் திட்டங்கள் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டது.

இதில் துறைசார் திணைக்களத் தலைவர்கள் மற்றும் விவசய அமைப்புக்களின் பிரதிநிதிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

# யாழ். பல்கலை ஏற்பாட்டில் ‘திறன்காண் நிகழ்ச்சி 2022’!



யாழ்ப்பாண பல்கலைக்கழகம் முதன் முறையாக ‘திறன்காண் நிகழ்ச்சி – 20223 எனும் கருப்பொருளை மையமாகக் கொண்டு அழகு மற்றும் விருந்தோம்பல் துறைசார்ந்த நிகழ்வை ஏற்பாடு செய்துள்ளது.

இந்த நிகழ்வு, எதிர்வரும் 15 ஆம் மற்றும் 16 ஆம் திகதிகளில் யாழ்ப்பாண பல்கலைக்கழக வளாகத்தில்நடத்தத்திட்டமிடப்பட்டுள்ளது.

பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே யாழ்ப்பாண பல்கலைக்கழக பணிப்பாளர் மற்றும் ஏற்பாட்டுக் குழுவினர் தெரிவித்தனர்.

பல்கலைகழக மாணவர்களால் முன்னெடுக்கப்பட்டுள்ள இந்த நிகழ்வு, இளைஞர்களின் திறமைகளை வெளிக்கொண்டு வரும் முயற்சியில் பன்முகத்திறன்காண் போட்டிகளான, மணப்பெண் அலங்காரம் மற்றும் உயர் நாகரிக அலங்காரப்போட்டிகள், பானங்களில்பலவர்ணங்களை வெளிப்படுத்தும் மொக்டெய்ல் போட்டி என்பவற்றை உள்ளடக்கியுள்ளது.

இதற்கு இணையாக உள்ள 50 இற்கு மேற்பட்ட உயர், நடுத்தர மற்றும் சிறிய வியாபார நிறுவனங்களின் சந்தைப்படுத்தல் காட்சியறைகளும், பார்வையாளர்களின் நலன்கருதி அடிப்படை மருத்துவ பரிசோதனைகள் குறிப்பாக, கண், காது, உடல் நிறைச்சுட்டி, குருதி அமுக்கம் மற்றும் சர்க்கரை பரிசோதனை என்பவற்றை இலவசமாகச் செய்து கொள்வதற்கான இலவச மருத்துவ முகாமும் இந்நிகழ்வின் பிரதானமான அங்கங்களாக உள்ளன.

# 148 ஆவது உலக அஞ்சல் தினம்: யாழில் நடந்தது இரத்ததான முகாம்!

148 ஆவது உலக அஞ்சல் தினத்தை முன்னிட்டு யாழ் பிரதான அஞ்சலகத்தால் இரத்ததான முகாமொன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

ஆண்டுதோறும் நடைபெறும் இரத்ததான முகாம் நேற்று (வெள்ளிக்கிழமை) காலை 9 மணியளவில் யாழ். மாவட்ட பிரதான அஞ்சல் அலுவலகத்தில் நடைபெற்றது.

இதன்போது, அதிகளவான அஞ்சலக உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள் தன்னார்வரீதியாக இரத்ததான முகாமில் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் வடமாகாண பிரதி அஞ்லதிபதி நாயகம் திருமதி மதுமதி வசந்தகுமார், யாழ்ப்பாணம் பிரதேச அஞ்சல் அத்தியட்சகர் அனுராத பெர்னாண்டோ, யாழ். பிரதம அஞ்சல் அதிபர் இ.மணிவண்ணன், தபாலதிபர்கள், வடமாகாண சுங்க திணைக்கள அதிகாரிகள், அஞ்சலக உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.





# கிளிநொச்சி மாவட்டத்தில் 7 ஆவது பொலிஸ் நிலையம்!



கிளிநொச்சி மாவட்டத்தின் 7ஆவது பொலிஸ் நிலையம் நேற்று (வெள்ளிக்கிழமை) உத்தியோக பூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டது.

பொலிஸ்மா அதிபர் சி.டி.விக்கிரமரத்தின வழிகாட்டலின் பேரில் கிளாநொச்சி பொலிஸ் சிரேஷ்ட அத்தியச்சகர் எம்.கே.ஆர்.ஏ. குணரத்னவின் அழைப்பின் பேரில் கிளிநொச்சி மாவட்ட பொலிஸ் அத்தியச்சகர் எச்.சமுத்திர ஜீவன் பங்களிப்புடன் வடமாகான சிரேஷ்ட பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரியவால் இந்த பொலிஸ் நிலையம் திறந்து வைக்கப்பட்டது.

இதுவரை காலமும் பொலிஸ் காவலரணாக செயற்பட்டு வந்த இராமநாதபுரம் பொலிஸ் காவலரண், தற்போது பொலிஸ் நிலையமாக மாறியுள்ளது.

இந்த நிகழ்வில் பொது அமைப்புக்கள், கிரம சேவையாளர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

வடமாகாணத்தில் 61 ஆவது பொலிஸ் நிலையமாக இந்த பொலிஸ் நிலையம் பதிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அரச நிறுவனங்களில் ஊழியர்கள் பற்றாக்குறை

அரச வருமானத்துக்கு பங்களிப்பு செலுத்தும் அரச நிறுவனங்களில் பெருமளவு ஊழியர்கள் பற்றாக்குறை காணப்படுவதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

சிங்கள ஊடகமொன்றில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அதற்கான புதிய ஆட்சேர்ப்புகளை தற்போது மேற்கொள்ள முடியாது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிலையில், அரச சேவையில் ஈடுபட்டுள்ள




இளம் ஊழியர்களுக்கு போட்டிப் பரீட்சை நடத்தி அதன் மூலம் ஆட்சேர்ப்புகளை மேற்கொள்ளவுள்ளதாக இராஜாங்க அமைச்சர் அறிவித்துள்ளார்.

# தென்னிந்திய திருச்சபையின் முறிகண்டி ஆலய வளாகத்தில் பெண்கள் விடுதி திறந்து வைப்பு!



தென்னிந்திய திருச்சபையின் முறிகண்டி ஆலய வளாகத்தில் புனித பவுல் பெண்கள் விடுதி நேற்று (வெள்ளிக்கிழமை) திறந்து வைக்கப்பட்டது.

கல்வி மற்றும் தொழிலின் நிமிர்த்தம் வரும் பெண்களுக்குப் பாதுகாப்பான இருப்பிட வசதியை வழங்கும் நோக்குடன் இந்தப் பெண்கள் விடுதி திறந்து வைக்கப்பட்டுள்ளது.

தென்னிந்திய திருச்சபை யாழ்ப்பாண ஆதீனத்தின் இணைத் திட்ட அலுவலர் ஞானசங்கரி சப்தசங்கரி தலைமையில் காலை 10.30 மணியளவில் திறந்து வைக்கப்பட்டது.

நிகழ்வில் பேராயர் டானியல் எஸ்.தியாகராஜாவின் ஆசீர்வாதத்துடன், நிறைவாழ்வு மையத்தின் இயக்குநர் டாக்டர் தயாளினி தியாகராஜா திறந்து வைத்தார்.

இந்த நிகழ்வில் தென்னிந்திய திருச்சபை யாழ்.ஆதீனத்தின் செயலாளரும், யாழ்ப்பாணக் கல்லூரி முதல்வருமான டி.எஸ்.சொலமன், அருட்தந்தையர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

யாழ்ப்பாண பல்கலைக்கழக கிளிநொச்சி வளாகத்துக்குட்பட்ட படிப்பிற்காக சென்றுள்ள மாணவர்களுக்காக 2009ஆம் ஆண்டு வரை முறிகண்டி பெண்கள் இல்லமாக இயங்கிவந்த கட்டட தொகுதி சீர் செய்யப்பட்டு, தற்போது புதுபொலிவுடன் இந்த பெண்கள் விடுதி திறந்து வைக்கப்பட்டுள்ளது.



**‘கம்பவாரிதி’ இலங்கை ஜெயராஜ் தமது ‘உகரம்’ இணையத்தளத்தில் ‘பாட்டும் நானே! பாவமும் நானே!’ என்ற தலைப்பில் வாராந்தம் வரையும் கேள்வி - பதில் பகுதி ‘காலைக்கதிர்’ நாளிதழில் ஒவ்வொரு வாரமும் வெளியாகி வாசகர்களின் அறிவுக்குத் தீனியாகிறது.**

# பாட்டும் நானே? பாவமும் நானே!

**1. கேள்வி:-** கல்வியா? செல்வமா? வீரமா?

**பதில்:-** இதைத் தெரிந்துகொண்டு என்னதான் செய்யப் போகிறீர்கள்? புளித்துப்போன இந்தத் தலைப்பை விடவே மாட்டீர்களா? மூன்றில் ஒன்று போதும் என்றால், சக்தி வழிபாட்டிற்கு ஏன் ஒன்பது நாள்களைச் செலவிடுகிறார்கள்? மூன்று நாள்களிலேயே அதை முடித்து விடலாமே. பொழுது போக்கிற்காகக் கேட்கப்படும் இத்தகைய வீண் கேள்விகளால் எரிச்சல்தான் வருகிறது.

**உலகநாதரின் ஒப்பீனியன் ⁎ பட்டிமண்டப நடுவருக்கே அலுத்துப்போன தலைப்பு.**

**2. கேள்வி:-** உக்ரெயினின் உக்கிரத்தைப் பார்த்தீர்களா?

**பதில்:-** ஆச்சரியமாய்த்தான் இருக்கிறது. ஆயிரந்தான் மேற்கு நாடுகள் துணை புரிந்தாலும் அந்தத் துணையை வைத்துக்கொண்டு இவ்வளவு பெரிய வீரியம் காட்ட வேறெவராலும் முடியுமா என்று தெரியவில்லை. ஆனால் ஒன்று, ரஷ்யா பின்வாங்கிச் செல்கிறதா? அல்லது பாய்வதற்காய்ப் பதுங்குகிறதா? என்பது பெரிய கேள்வியாகவே இருக்கிறது. தப்பித் தவறி ரஷ்யா அணு ஆயுதத்தில் கையை வைத்தால், நடக்கப்போகும் விபரீதத்தை நினைக்கத்தான் அச்சமாக இருக்கிறது.

**உலகநாதரின் ஒப்பீனியன் ⁎ இங்கு வெடிக்காத குண்டுகளா என்ன? ஹி..ஹி..**

**3. கேள்வி:-** புதிதாக இணையவெளிகளில் முன்னாள் போராளி பஷீர்காக்கா என்ற ஒருவர் பற்றிப் பலரும் பேசி வருகிறார்கள். அவரைப் பற்றி உங்களுக்கு ஏதேனும் தெரியுமா?

**பதில்:-** தெரியுமா என்றா கேட்டீர்கள்? அவர் போராளியாவதற்கு முன்பிருந்தே எனக்கு அவரைத் தெரியும். 1970களிலேயே அவர் எனது நண்பராகிவிட்டார். நான் யாழ் இந்துவில் ஏ.எல். படிக்கையில் நாயன்மார்கட்டைச் சேர்ந்த சிவகுமாரன் என்பவன் என் நெருங்கிய நண்பனாய் இருந்தான். (இவன் பொட்டம்மானின் கூடப்பிறந்த தமையன்). அவன் என்மீது நிறைய அன்பும், மதிப்பும் கொண்டிருந்தான். அவனுடைய நண்பர்களில் ஒருவனான ‘மனோகர்’தான் பின்னாளில் போராளியானபோது பஷீர் காக்கா என்று அழைக்கப்பட்டான். மனோகருக்குச் சிவகுமாரோடு இருந்த நெருங்கிய நட்பு, பின்னர் சிவகுமாரனின் ஊடாக எனக்கும் ஆனது.

இயக்கங்களுடைய போராட்டங்கள் வெடிப்பதற்கு முன்பான காலமது. நாயன்மார் கட்டிலிருந்த சிவகுமாரனுடைய வீடொன்றில் நாங்கள் அடிக்கடி சந்தித்துக் கொள்வோம். பொட்டமானுக்கு சிவசங்கர் என்பதுதான் உண்மைப்பெயர். அண்ணனுடைய நண்பன் என்ற வகையில், அவனும் என்மீது மதிப்புக் கொண்டிருந்தான். அப்போதே, அவன் பெரும் இனப்பற்றுடையவனாக இருந்தான்.

நாங்கள் எங்கள் கழகத்திற்கு ‘அகில இலங்கைக் கம்பன் கழகம்’ என்று பெயர் வைத்ததில் அவனுக்கு உடன்பாடில்லை. தமிழீழக் கம்பன் கழகம் என்று அதற்குப் பெயர் வைக்கவேண்டும் என்று என்னோடு வாதிடுவான். ‘நீ கையில் வைத்துச் செலவழிக்கும் பணத்தில் இலங்கை என்றுதான் போட்டிருக்கிறது. அதையும் அப்படியானால் எறிந்துவிடு!’ என்று அவனுக்குப் பதில் சொல்வேன். ‘வேண்டுமானால் ஈழம் கிடைத்தபிறகு நாங்கள் கழகப்பெயரை மாற்றிக் கொள்வோம்’ என்றும் சொல்வேன்.

ஆரம்பத்தில் நாங்கள் நடத்திய கம்பன்விழாவிற்காக ஒரு ‘போஸ்ரர்’ அடித்திருந்தோம். அதனைச் சுவர்களில் ஒட்டும் பொறுப்பை எங்களைவிட வயதில் குறைந்தவனான சங்கரிடம்தான் கொடுத்திருந்தோம். அடுத்த நாள் பார்த்தால், நல்லூரைச் சுற்றிய இடங்களில் ஒட்டப்பட்டிருந்த ‘போஸ்ரர்’களில் ஈழத் துரோகிகள் என்று பேனாவால் எழுதப்பட்டிருந்தது. சங்கர், முன்பு எனக்கு எழுதிய கடிதங்களோடு ஒப்பிட்டுப் பார்த்ததில், அவனே இந்த வேலையைச் செய்திருக்கிறான் என்று தெரிந்தது. அவனைக் கூப்பிட்டுக் கேட்க சிரித்துக் கொண்டு நின்று என்னிடம் நல்ல திட்டு வாங்கினான்.

ஒருமுறை புதிதாகத் தேர்தலில் நின்ற யோகேஸ்வரன் எம்.பி.யின் தேர்தல் கூட்டம் ஒன்றின்போது தன் கையைக் கிழித்து அவன் இரத்தப் பொட்டிட்ட செய்தி பத்திரிகையில் வந்தது. அதனால்த்தான் அவனுக்குப் பொட்டம்மான் என்று பெயர் வந்ததாகச் சொல்வார்கள். அந்தச் செய்தியைக் கேள்விப்பட்டு ஏன் இந்த உணர்ச்சிவயப்பாடு என்று கோபப்பட்டேன். அவனைக் கேட்கவேண்டும் என்பதற்காக, நாயன்மார் கட்டிற்குச் சென்றேன். அங்கே நாங்கள் வழக்கமாகச் சந்திக்கும் வீட்டில் அவனும், மனோகரும், இன்னும் ஒருசில நண்பர்களும் இருந்தார்கள். ‘ஏன் இப்படி மடத்தனமாய்ச் செயல்படுகிறாய்’ என்று நான் திட்ட, அவனும் மனோகரும் சிரித்துக் கொண்டு கேட்டுக் கொண்டிருந்தார்கள். பின்னர் ஒரு பெரிய கிளாஸில் எனக்கு தேசிக்காய் கரைத்துத் தந்து அனுப்பி வைத்தார்கள்.




அதற்குச் சிலநாள்களுக்குப் பின்னர்தான். திருநெல்வேலி தபால்கட்டைச் சந்தியடியில் குண்டு வெடித்து புலிகள் இயக்கம் பிரபலமானது. அதன் பிறகுதான் நான் நாயன்மார்கட்டில் சந்திக்கப் போன இடத்தில் இருந்தவர்கள் முக்கியமான புலி உறுப்பினர்கள் என்று தெரியவந்தது.

போராளியாகிவிட்ட பிறகு, காக்கா இம் மண்ணிற்காகச் செய்த தியாகங்களுக்கு ஒரு அளவேயில்லை. தன் வாழ்க்கை முழுவதையும் இந்த மண்ணுக்காக அர்ப்பணித்த மாமனிதர் அவர். போராளியாய் இருந்த காரணத்தினால் தன் பிள்ளையைக்கூடப் பறிகொடுத்தவர். இம் மண், என்றோ ஒருநாள் விடுதலைபெறும் என்ற நம்பிக்கையை ஒரு துளியளவேனும் குறையவிடாது இன்றுவரை வாழ்ந்து வருபவர். விடுதலைப் புலிகள் எனும் அமைப்பின் அத்திவாரக்கற்களாய் இருந்;தவர்களில் அவரும் முக்கியமான ஒருவர்.




அவரை, ‘ரெலோ’ இயக்கம் கடத்திச் சென்று வைத்திருக்க, ‘காக்காவைத் தொட்டால் நாங்கள் சும்மா விடுவோமா?’ என்று சொல்லித்தான், கிட்டு ரெலோ மீதான தாக்குதலைத் தொடங்கியதாகச் சொல்வார்கள். காக்கா பெரிய படிப்பாளி இல்லை. உடலால் பெரிய பலசாலியும் இல்லை. ஆனாலும் இனத்தின் மீதான அவரின் உண்மைப் பற்றுத்தான் அன்று தொட்டு இன்றுவரை அவரை வீரியமான ஒரு மனிதராய் இயக்கி வருகிறது.

இன்று நம் தலைவர்களில் பலபேர் தங்களைத் தியாகிகளாய்க் காட்டி, நாடாளுமன்றத்திற்குள்ளும் நுழைந்துவிட்டார்கள். காக்காவின் தியாகத்தோடு ஒப்பிடுகிறபொழுது இவர்களுடைய தியாகங்கள் எல்லாம் பஞ்சாய்ப் பறந்து போய்விடும். இத்தகைய உண்மையானவர்களைத்தான் இடைக்காலத்தில் கூட்டமைப்பு, அரசின் கைப்பொம்மைகள் என்று பட்டங்கட்டி இழிவு செய்தது. அவர்களின் பொய்யுரையை எங்கள் இனத்தாரும் ஏற்றது பெரிய கொடுமை!

எந்த எதிர்பார்ப்பும் இன்றி, இன்றுவரை மண்ணின் உயர்விற்காகப் போராடி வருகிறார் காக்கா. ஒன்றை மட்டும் உறுதியாய்ச் சொல்வேன். என் நண்பர் என்பதிலே அவருக்கு எந்தப் பெருமையும் இல்லை. அவரது நண்பர் என்பதிலே எனக்கு நிறையப் பெருமை இருக்கிறது.

இயக்கத்திலிருந்தபோது எனக்காகப் பல உதவிகளைக் காக்கா செய்திருக்கிறார். நான்தான் அவருக்கு எந்த உதவியும் செய்யவில்லை. புலி, ரெலோ மோதலின் போது ரெலோ ஆதரவாளரான ஐங்கரநேசன் அவர்கள் (பின்னாளில் மாகாணசபை அமைச்சராயும் இருந்தவர்) புலி உறுப்பினர்களால் கடத்திச் செல்லப்பட்டார். அவர் கொல்லப்பட்டுவிட்டார் என்ற செய்தி பரவலாக அடிபட, தனியே இருந்த அவரின் தமக்கை பெருந் துன்பப்பட்டார். ஒருநாள் கந்தர்மடச் சந்திக்கருகில் இருந்த C.T.B. தியாகராஜா வீட்டில் நாம் அவரைச் சந்தித்தோம். அப்போது ஐங்கரநேசன் உயிரோடு இருப்பதை எப்படி உறுதிப்படுத்துவது என்ற கேள்வி எழுந்தது. அந்தப் பொறுப்பை நான் ஏற்றுக் கொண்டேன். பின்னர் நாயன்மார்கட்டுக்குச் சென்று காக்காவைச் சந்தித்து ‘ஐங்கரநேசன் கல்வி உலகத்திற்குத் தேவையானவன். அவனது உயிருக்கு எந்தவித ஆபத்தும் நேர்ந்துவிடக்கூடாது’ என்று எடுத்துச் சொன்னேன். காக்கா, ‘நீங்கள் கவலைப்படாதீர்கள்! அவர் உயிரோடுதான் இருக்கிறார்’ என்று சொன்னார். சொன்னதோடு மட்டுமல்லாமல் அடுத்தநாள் அவர் இருப்பதற்கான ஆதாரம் தந்து எனக்கு உதவி செய்தார்.

அதுபோலவே இயக்கத்திலிருந்து பெரும்பாடுபட்ட எங்களுடைய மற்றொரு போராளி நண்பன், இந்திய இராணுவ வருகைக்குப் பின்னர் இயக்கத்திலிருந்து விலக நினைத்து, சிலகாலம் எங்களோடு வந்து தங்கியிருந்தான். அவன் பாவித்த ஆயுதம் அவனிடமே இருந்தது. அதனை இயக்கத்திடம் ஒப்படைக்க வேண்டும் என்ற நிலையில், அவன் மீண்டும் இயக்க அலுவலகத்;திற்குச் சென்றால், அவனை அங்கேயே மறித்துவிடுவார்கள் என்று அவன் குடும்பத்தார் பயந்தார்கள். அப்படியானால் அவனது ஆயுதத்தை எப்படி ஒப்படைப்பது என்று பெரிய குழப்பம் ஏற்பட நான் காக்காவைச் சந்தித்து உதவி கேட்டேன். காக்கா, தானே எங்கள் இடத்திற்கு வந்து அந்த ஆயுதத்தை வாங்கிச் சென்று இயக்கத்திடம் ஒப்படைத்து உதவி செய்தார்.

காக்காவைப் பற்றிச் சொல்வதானால் இன்னும் நிறையச் சொல்லலாம். அந்த மனிதரின் பெருமைகளைத் தெரியாதவர்கள், தியாகி திலீபனுக்கு அவர் தீபம் ஏற்றக்கூடாது என்று மறித்தார்களாம். இது நல்ல கதைதான்! நல்லவர்களை என்றுதான் நம் இனம் கண்டு கொள்ளப் போகிறதோ?

**உலகநாதரின் ஒப்பீனியன் ⁎ காக்கா(வை) பிடிக்க காரணம் சரியாய்த்தான் இருக்கிறது. ஹி.. ஹி..**

**4. கேள்வி:-** அண்மைக்காலமாய் நம் தமிழ் அரசியல் தலைமைகள் அதிக பரபரப்பின்றி அமுங்கிக் கிடப்பதாய்த் தோன்றுகிறது. அது ஏன்? (திலீபன் நினைவுத்தூபி நிகழ்வைத் தவிர)

(08ஆம் பக்கம் பார்க்க)

# யாழில் வர்த்தகர்களுக்கு எதிராகசட்ட நடவடிக்கை: 25 லட்சத்துக்கு அதிகமாக தண்டப் பணம் அறவீடு!

யாழ். மாவட்டத்தில் வர்த்தகர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட சட்ட நடவடிக்கையின் போது, 25 லட்சத்துக்கு அதிகமான தொகை தண்ட பணமாக அறவீடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த செப்ரெம்பர் மாதம் 63 வர்த்தகர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட சட்ட நடவடிக்கையின் போதே 25 லட்சத்து 74 ஆயிரத்து 500 ரூபா தண்டப் பணம் அறவிடப்பட்டுள்ளதாக யாழ்ப்பாண மாவட்ட பாவனையாளர் அலுவலர்கள் அதிகார சபையின் மாவட்ட பொறுப்பதிகாரி ந.விஜிதரன் தெரிவித்துள்ளார்.

வர்த்தக நிலையங்களில் பொருள்களின் விலையைக் காட்சிப்படுத்த தவறியமை, அரசால் நிர்ணயிக்கப்பட்டுள்ள கட்டுப்பாட்டு விலையை மீறி பொருள்களினை பொதுமக்களுக்கு விற்றமை உற்பத்தியாளர்கள் மற்றும் இறக்குமதியாளர்களின் விவரங்கள் இல்லாது பொருள்களைக் காட்சிப்படுத்தியமை மற்றும் விற்பனை செய்தமை, காலாவதியான பொருள்களை விற்பனை செய்தமை மற்றும் காட்சிப்படுத்தியமை, நுகர்வோரை ஏமாற்றும் நோக்கோடு பொருள்கள் மீது பொறிக்கப்பட்ட விலையை மாற்றி புதிய விலையை சேர்த்தமை, இலத்திரனியல் பொருள்களுக்கு குறைந்தபட்ச 6 மாத கால உத்தரவாத காலம் வழங்கத் தவறியமை உள்ளிட்ட காரணங்களுக்காக அவர்களுக்கு சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அத்துடன், தொடர்ச்சியாக யாழ்ப்பாண மாவட்ட பாவனையாளர்கள் அலுவலர்கள் அதிகார சபையின் உத்தியோகத்தர்களால் தேடுதல்கள் மற்றும்



கண்காணிப்பு விஜயங்கள் மேற்கொள்ளப்பட்டு பொது மக்களுக்கு அசௌகரியம் ஏற்படுத்தும் விதமாக செயற்படும் வர்த்தகர்களுக்கு எதிராகவும் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வுள்ளது.

## விவசாயிகளுக்கு மானிய அடிப்படையில் எரிபொருள் வழங்கப்படவேண்டும்

விவசாயிகளுக்கு மானிய அடிப்படையில் எரிபொருள் வழங்கப்படவேண்டும் என அகில இலங்கை தொழிலாளர் சமூகங்களின் கூட்டமைப்பின் தேசிய அமைப்பாளர் என்.வி.சுப்பிரமணியம் தெரிவித்துள்ளார்.

யாழ் ஊடக அமையத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அத்துடன், எரிபொருள் ஒழுங்காக வழங்கப் படாமையால் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இதனால், விவசாய உற்பத்திகளும் குறைவடைந்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.



உரத்தை இறக்குமதி செய்து அதனை விவசாயிகளுக்கு வழங்கி வைப்பதற்கும் அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தார்.

## வடக்கு மாகாண மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் நடமாடும் சேவைகள்!

வடமாகாண மோட்டார் போக்குவரத்து திணைக்களம் மத்திய மோட்டார் போக்குவரத்து திணைக்களத்துடன் இணைந்து நடத்தும் நடமாடும் சேவை எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 22 மற்றும் 23 ஆம் திகதிகளில் காலை 9.30 மணி தொடக்கம் பி.ப 4.30 மணிவரை வடமாகாண சபை வளாகம், கைதடியில் நடைபெறவுள்ளது.

இந்த நடமாடும் சேவையில் பின்வரும் சேவைகள் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளன.

» வாசித்தலில், எழுதுதலில், விசேட தேவையுடையோருக்கான சாரதி அனுமதிப் பரீட்சையும் மருத்துவச்சான்றிதழ் பெற்றுக் கொள்ளலும்.
» சர்வதேச சாரதி அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்ளல்.
» தனிப்பட்ட மோட்டார் கோச்சினை ஓமினிபஸ் ஆக மாற்றம் செய்தல்.
» வாகன பதிவுப்புத்தகத்தில் திருத்தங்கள் மேற்கொள்ளல்.
» வாகன இலக்கத்தகடு பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கைகள்.
» வாகன உடைமை மாற்ற விண்ணப்பங்கள் கையேற்றல்.
» 2014/2015 ஆம் ஆண்டு செயற்திட்டத்தின் ஊடாக வழங்கப்பட்ட வாகனங்களின் நிபந்தனைகளை நீக்குதல்.
» வாகன நிறைசான்றிதழ் பெற்றுக் கொள்ளல்.
» இதுவரை மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தில் சமர்ப்பிக்கப்பட்டு தீர்க்கப்படாத நிலுவைகள்.
» வாகன வருமானவரி தொடர்பானவை.

## இலங்கையர்கள் உட்கொள்ளும் உணவின் தரம் குறித்து ஆய்வு!

இலங்கையர்கள் உட்கொள்ளும் உணவின் தரம் தொடர்பாக ஆய்வு நடத்த சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

இறக்குமதி மற்றும் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் உணவுப் பொருள்களின் தரத்தை நிலைநிறுத்த இந்த ஆய்வு மேற்கொள்ளப்படவுள்ளதாக அந்த அமைச்சின் உணவுக் கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்த ஆய்வுக்காக 25 இற்கும் மேற்பட்ட அத்தியாவசிய உணவு வகைகள் தேர்ந்தெடுக்கப்படும் என்றும் மாதிரி சேகரிப்பு அடுத்த மாதம் ஆரம்பிக்க உள்ளதாகவும் அந்த பிரிவு தெரிவித்துள்ளது.

அண்மைய வாரங்களில் இலங்கைக்கு இறக்குமதிசெய்யப்படும் உணவுப் பொருள்களின் தரம் தொடர்பாகக் கவலைகள் எழுந்த நிலையிலேயே, இலங்கையர்கள் உட்கொள்ளும் பல்வேறு வகையான உணவுகள் பற்றியும் ஆய்வு நடத்த சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

## கியூடெக் – கரித்தாஸ் நிறுவனத்தினால் சிறுவர் முதியோர் தின மருத்துவமுகாம்!





சிறுவர் முதியோர் தினத்தை முன்னிட்டு கியூடெக் கரித்தாஸ் யாழ்ப்பாணம் நிறுவனத்தின் ஒருங்கிணைந்த சமூக மேம்பாட்டு இணைந்த கரங்கள் குழுவினரின் ஏற்பாட்டில் கர்த்தர் ஆலயப் பங்கு, இளையோர் கழகம், ஒன்றிணைந்து முன்னெடுத்த இலவச மருத்துவ முகாம் 01.10.2022 சனிக்கிழமை காலை 9 மணி முதல் 2 மணி வரை நடைபெற்றது.

நல்மனம் கொண்ட மருத்துவர்கள், மருந்தாளர்கள், திருச்சிலுவை கன்னியர் வைத்தியசாலை மருத்துவர் பணியாளர்கள் மற்றும் குருநகர் அரசின் மருத்துவ குழுவினர், மருத்துவர் யூட் அவரது குழுவினர் ஒன்றிணைந்து இலவச மருத்துவ முகாமை சிறப்பித்தனர்.

மணியந்தோட்டம், உதயபுரம், வசந்தபுரம், பூம்புகார் மக்களின் மருத்துவ தேவைகளை இனங்கண்டு அதற்கான மருந்துவகைகளும் பெற்றுக்கொண்டதுடன் தொடர் மருத்துவ தேவைகளை யாழ்.போதனா வைத்திய நிலையத்திலும் தொடர ஒழுங்குகள் மேற் கொள்ளப்பட்டது.

## சர்வதேச சிறுவர் தின நிகழ்வுகள் சம்மாந்துறையில் சிறப்புற நடந்தன!

சம்மாந்துறை ப்ரில்லியன்ட் பாலர் பாடசாலையில் சர்வதேச சிறுவர் தினம் நிகழ்வுகள் முகாமைத்துவ பணிப்பாளர் எ.ஐ.சர்ஜீன் தலைமையில் நடைபெற்றது. இதில் பிரதம அதிதியாக சம்மாந்துறை உதவி பிரதேச செயலாளர் யூ.எம். அஸ்லமும், கௌரவ அதிதிகளாக இளம் விஞ்ஞானி சோமசுந்தரம் வினோஜ்குமாரும், சமூக சேவை உத்தியோகத்தர் ஜனாப் சாபீரும், கருவாட்டுக்கல் -01 பிரிவின் கிராம சேவகர் ஐ.பாயிசாவும் கலந்து கொண்டதோடு மேலும் விசேட அதிதிகளாக எம்.எச்.ஸ்ம்றினாவும், ஜே.எஸ்.றியானா வும், கே.எல்.றினோசாவும், எம்.ரீ. பௌசியாவும் மேலும் ஆசிரியர்களான ஏ.சிறாஜின்னிசா, எம்.எச்.ஹசீனா, எம்.எச். பர்ஹானா ஆகியோரும் கலந்து சிறப் பித்தனர்.



அங்கு கலந்துகொண்ட சோ.வினோஜ் குமார் உரையாற்றுகையில்

தற்காலத்தில் சிறுவர்களை வளர்ப்பதில் பிழையான தொழில்நுட்ப பாவனை மற்றும் போதைப்பொருள் பாவனையால் அதிக சிறுவர்கள் பாதிக்கப் பட்டுக்கொண்டிருக்கின்றனர். இது தொடர்பான நல்ல விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை பாலர் பாடசாலையில் இருந்தே சிறுவர்களுக்கு வழங்க வேண் டும். மேலும் பெற்றோர் ஒவ்வொரு நாளும் சிறுவர்களுடன் சுயாதீனமாகப்பேசி அவர்களது பிரச்சினைகளை இனங் கண்டு அதற்கு ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டல்கள் வழங்கப்பட வேண்டும். அப்போதுதான் எதிர்காலத்தில் அவர் களைப் பல பிரச்சினைகளில் இருந்து பாதுகாத்து வளமான எதிர்காலத்தை உருவாக்க முடியும்.

மேலும் மாணவர்களுக்கு வீட்டுத் தோட்டம் செய்வதற்கான பயிர்கள் மற்றும் கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக் கப்பட்டன.



## பாட்டும் நானே? ......

(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

**பதில் :-** ஒருவேளை மக்களை ஏமாற்றும் அவர்களின் அரசியல் விளையாட்டு, அவர்களுக்கே அலுத்துப்போய்விட்டதோ என்னவோ?

**உலகநாதரின் ஒப்பீனியன் * வாரிதியார் சொல்லுறது 'கறீறீட்டுங்கோ'! ஹி..ஹி..**

**5. கேள்வி:-** சீன அதிபருக்கும் கூட்டமைப்புத் தலைவர் சம்பந்தருக்கும் எதிராக எழுந்த புரட்சிகள் என்னாயிற்றாம்?

**பதில்:-** 'யாவும் கற்பனை' என்று, கதையைச் 'சப்' பென்று முடித்துவிட்டார்கள்! ஆனாலும் சில கேள்விகள் எழத்தான் செய்கின்றன.

உண்மையில் புரட்சி நடந்ததா? என்பது முதல் கேள்வி.

எழுந்த புரட்சி, தானாய்க் கைவிடப்பட்டதா? என்பது அடுத்த கேள்வி.

அந்தந்தத் தலைவர்களே ஓர் புரட்சிக் கதையைக் கட்டித் தம்முடைய பலம் பற்றிய பரிசோதனை நிகழ்த்தினார்களா? என்பது மூன்றாவது கேள்வி.

எழுந்த புரட்சியை அத்தலைவர்கள் தம் பலம்கொண்டு அடக்கிவிட்டார்களா? என்பது நான்காவது கேள்வி.

அத் தலைவர்கள் புரட்சியாளர்களுடன் சமரசம் செய்து கொண்டார்களா? என்பது நிறைவுக் கேள்வி.

ஏதோ ஒன்று நடந்திருக்கிறது. அது என்ன என்று கடவுளுக்கும் அத் தலைவர்களுக்குந்தான் வெளிச்சம்.

**உலகநாதரின் ஒப்பீனியன் * சீனத்தலைவருடன் சம்பந்தன் ஐயாவா? வாரிதியார்! இது உங்களுக்கே கொஞ்சம் 'ஓஓஓவரா' படவில்லையா**

காலைக்கதிர் Kalaikkathir

# இந்தியத் தயாரிப்பு மோட்டார் சைக்கிள்கள் உதவியாக லெபனான் அரசிடம் ஒப்படைப்பு



இருதரப்பு உதவியின் ஒரு பகுதியாக இந்தியாவில் தயாரிக்கப்பட்ட மோட்டார் சைக்கிள்களை லெபனான் அரசாங்கத்திடம் இந்தியா ஒப்படைத்ததாக இந்திய வெளியுறவு அமைச்சகம் திங்கட்கிழமை தெரிவித்துள்ளது.

இந்தியாவின் இருதரப்பு உதவியின் ஒரு பகுதியாக, வெளியுறவு அமைச்சகம் மற்றும் லெபனான் மற்றும் பெய்ரூட் கவர்னரேட்டின் குடியேறியவர்களுக்கு இந்தியாவில் தயாரிக்கப்பட்ட மோட்டார் சைக்கிள்களையும் செயலாளர் வழங்கினார் என்று வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர் அரிந்தம் பாக்சி ஒரு ட்வீட்டில் தெரிவித்தார்.

இந்தியாவின் இராஜதந்திர சேவையைச் சேர்ந்த டாக்டர் அவுசாப் சயீத்தின் (செயலர் – கொன்ஸியுலர், பாஸ்போர்ட், விஸா மற்றும் வெளிநாட்டு இந்திய விடயங்கள்) அக்டோபர் 03 – 04 அன்று லெபனான் பயணத்தின் போது இது ஒப்படைக்கப்பட்டது.

அவரது உத்தியோகபூர்வ பயணத்திற்கு முன்பு, அவர் 02 அக்டோபர் 2022 அன்று சிரியாவிற்கு விஜயம் செய்தார் என்று இந்திய வெளியுறவு அமைச்சகம் ஒரு செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளது.

அவர் லெபனானின் வெளியுறவு அமைச்சர் மற்றும் புலம்பெயர்ந்தோர் அமைச்சர் டாக்டர் அப்துல்லா பௌஹபீப்பை சந்தித்து இருதரப்பு, பிராந்திய மற்றும் சர்வதேச பரஸ்பர நலன்கள் குறித்து விவாதித்தார்.

அவர் வெளியுறவு அமைச்சகம் மற்றும் புலம்பெயர்ந்தோர் அமைச்சகத்தின் பொதுச்செயலாளர் ஹனி செமைடெல்லியையும் சந்தித்தார். சந்திப்பின் போது இருதரப்பு ஒத்துழைப்பின் முக்கிய பகுதிகள், வர்த்தகம், மக்களிடையேயான தொடர்பு, தொழில் பயிற்சி போன்றவற்றை இரு தரப்பினரும் அடையாளம் கண்டனர். செயலாளர் (கொன்ஸியுலர், பாஸ்போர்ட், விஸா மற்றும் வெளிநாட்டு இந்திய விடயங்கள்) பெய்ரூட் நகர ஆளுநரையும் சந்திக்கப் போகிறார் என்று அமைச்சகம் கூறியது.


இந்தியாவின் இருதரப்பு உதவி செயலாளரும் (கொன்ஸியுலர், பாஸ்போர்ட், விஸா மற்றும் வெளிநாட்டு இந்திய விடயங்கள்) வெளியுறவு அமைச்சகம் மற்றும் புலம்பெயர்ந்தோர் மற்றும் பெய்ரூட் கவர்னரேட்டிற்கான இந்தியாவில் தயாரிக்கப்பட்ட மோட்டார் பைக்குகளையும் வழங்கினார்.

செயலர் (கொன்ஸியுலர், பாஸ்போர்ட், விஸா மற்றும் வெளிநாட்டு இந்திய விடயங்கள்) விரைவில் லெபனானில் செயற்கை மூட்டு பொருத்துதல் முகாம் (ஜெய்ப்பூர் கால்) ஏற்பாடு செய்யப்படும் என்றும் அறிவித்தார்.

தொழில்துறை அமைச்சர் ஜார்ஜ் பௌச்சேகியன் கலந்துகொண்ட உயர்மட்ட வணிகக் கருத்தரங்கில் செயலாளரும் (கொன்ஸியுலர், பாஸ்போர்ட், விஸா மற்றும் வெளிநாட்டு இந்திய விடயங்கள்பங்கேற்றார். உணவு மற்றும் வேளாண் வணிகம், மருந்துகள், இரத்தினங்கள் மற்றும் நகைகள், மின்னணுவியல், சோலார் பேட்டரிகள், சிறிய வாகனங்கள் உள்ளிட்ட வர்த்தகத்தை மேம்படுத்துவதற்கான பல பகுதிகள் அடையாளம் காணப்பட்டன.

லெபனானில் உள்ள ஐக்கிய நாடுகளின் இடைக்காலப் படையில் (UNIFIL) இந்திய பட்டாலியன் ஆற்றிய நேர்மறையான பங்கையும் லெபனான் தரப்பு பாராட்டியது.

செயலாளரின் (கொன்ஸியுலர், பாஸ்போர்ட், விஸா மற்றும் வெளிநாட்டு இந்திய விடயங்கள்) லெபனான் பயணம் இருதரப்பு உறவுகளை புதுப்பித்து, எதிர்காலத்தில் வலுவான உறவுகளுக்கு வழி வகுக்கும்.



# ஆசியாவில் 950 கோடீஸ்வரர்கள் அவர்களில் மும்பையில் 51 பேராம்

## ஆய்வு முடிவு வெளியீடு

உலக அளவில் ஆசியாவில் 32 கோடி பேர் வறுமையில் உள்ளபோதும், 950 கோடீஸ்வரர்கள் உள்ளனர் என ஆய்வு முடிவு தெரிவிக்கின்றது.

உலகம் முழுவதும் கொரோனா பெருந்தொற்று பரவியதும், ஊரடங்கு, முடக்கங்கள் அறிவிக்கப்பட்டு, அமல்படுத்தப்பட்டு, பொருளாதார நடவடிக்கைகளில் தேக்கம் காணப்பட்டது. எனினும், இந்த நெருக்கடியால் 500 பேர் வரை கோடீஸ்வரர்கள் அந்தஸ்துக்கு உயர்ந்து உள்ளனர் என ஓக்ஸ்பேம் ஆய்வு முடிவு தெரிவிக்கின்றது.


அதன்படி, கொரோனா காலத்தில் ஒவ்வொரு 30 மணிநேரத்திற்கு ஒரு கோடீஸ்வரர் உருவாகி உள்ளார்.

எனினும், 2022ஆம் ஆண்டில் 10 லட்சம் பேர் ஏழ்மை நிலைக்கு தள்ளப்பட்டு உள்ளனர். 32 கோடி ஆசியர்கள் வறுமையில் வாடி வருகின்றனர் என தெரிவிக்கின்றது.

போர்ப்ஸ் வெளியிட்டுள்ள பட்டியலில் 2,400 கோடீஸ்வரர்களில், 950 கோடீஸ்வரர்கள் ஆசியாவை சேர்ந்தவர்கள் என தெரிவிக்கப்பட்டு உள்ளது. வடஅமெரிக்கா (777 கோடீஸ்வரர்கள்), ஐரோப்பா (536 கோடீஸ்வரர்கள்) அடுத்தடுத்த இடத்தில் உள்ளன. ஆசிய பட்டியலில், முதல் இடத்தில் சீனா உள்ளது. சீனாவில் 440 பேர் கோடீஸ்வரர்களாக உள்ளனர். இதற்கடுத்து, இந்தியாவில் 116 கோடீஸ்வரர்கள் உள்ளனர். தைவான் மற்றும் தென்கொரியா உள்ளிட்ட 10 ஆசிய நாடுகளில் 114 கோடீஸ்வரர்கள் உள்ளனர். இவர்களில் இந்தியாவில் உள்ள பாதி கோடீஸ்வரர்கள் மும்பை நகரில் (51 பேர்) வசித்து வருகின்றனர். மும்பையில், உலகின் 9ஆவது பணக்காரரரான முகேஷ் அம்பானி உள்பட பல பணக்காரர்கள் வசித்து வருகின்றனர்.

# இராணுவ டாங்கின் சுடுகுழல் வெடித்ததில் 2 வீரர்கள் சாவு!

## மத்தியப் பிரதேசத்தில் சம்பவம்



பாபினா,ஒக்.08

இந்தியாவின் மத்தியப் பிரதேசம், பாபினா பகுதியில் டி – 90 ராணுவ டாங்கின் பரல் (சுடு குழல்) வெடித்ததில் 2 வீரர் கள் உயிரிழந்தனர்.

மத்திய பிரதேசம், பாபினா பகுதியில் துப்பாக்கிச் சூட்டுப் பயிற்சியில் இராணுவ வீரர்கள் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர்.

அப்போது அங்கு பயிற்சியில் ஈடுபட்டுக்கொண்டிருந்த டி – 90 ராணுவ டாங்கின் பரல் எதிர்பாராத விதமாக வெடித்து விபத்து ஏற்பட்டது. இந்த சம்பவம் நேற்று மாலை நடந்துள்ளது. விபத்துக்குள்ளான டாங்கியில் 3 இராணுவ வீரர்கள் இருந்துள்ளனர். இதில் 2 வீரர்கள் உயிரிழந்தனர். மேலும் ஒருவர் பலத்த காயமடைந்தார். இதனையடுத்து, காயமடைந்த வீரரை மீட்டு பாபினா ராணுவ மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதித்துள்ளனர்.

பலியான வீரர்களின் குடும்பத்தினருக்கு இந்திய இராணுவம் தனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறது எனவும் இந்த சம்பவம் குறித்து விசாரணை நடத்த இராணுவம் உத்தரவிட்டுள்ளதாகவும் அதிகாரி ஒருவர் தகவல் தெரிவித்துள்ளார்.

காலைக்கதிர் Kalaikkathir

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கைப் புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'காலைக்கதிர்' வாசகர்களுக்கு நன்கு அறியப்பட்ட கட்டுரையாளர். அரசையும் ஜனாதிபதியையும் பதவியை விட்டுப் போகும்படி வலியுறுத்தி தற்போது நடக்கும் போராட்டங்களை தமிழரின் உரிமைப் போராட்ட அனுபவங்களோடு இத்தொடரில் ஒப்பிட்டுப் பார்க்கின்றார் அவர்.



- செல்லத்துரை ரவீந்திரன் -

அங்கம் - 143

# யாழ்ப்பாணம் தொடக்கம் காலிமுகத்திடல் வரை...!

## பிரிவினைக் கோரிக்கையின் முன் வடிவம்

இடைக்கால நிர்வாக அமைப்பின் வரவை தயாரிப்பதற்காக பிரபாகரன், விடுதலைபுலிகள் முன்னர் அரசமைப்புகளை ஆராய்வதற்காக ஏற்படுத்திய 21 பேரை விட, அரசமைப்புகள் பற்றிய புத்திமதிகள் தருவதற்காகத் தான் புதியதொரு குழுவை அமைத்தார்.

அதில் சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழக பேராசிரியர் கலாநிதி சொர்ணராஜா, இலங்கையின் முன்னாள் சட்டமா அதிபரும் ஜனாதிபதி சட்டத்தரணிமான சிவா பசுபதி (அமிர்தலிங்கத்திற்கு எதிரான 'ட்ரயல் அட் பார்' வழக்கில் அரசாங்கத் தரப்பில் பிரதான வழக்கறிஞராகவும், பின் பயங்கரவாதத் தடைச் சட்டங்களை மேற்பார்வையும் செய்தவர்), தற்சமயம் நாடு கடந்த தமிழீழ அரசின் பிரதமராக இருக்கும் விடுதலைப் புலிகளின் சட்டத்தரணி வி.உருத்திரகுமாரன், சிட்னி சர்வகலாசாலையின் சட்டத்துறைப் பேராசிரியர் போல் டொமினிக், மலேசிய தேசியப் பல்கலைக்கழகத்தின் அரசியல் துறை பேராசிரியர் கலாநிதி இராமசாமி, சட்ட விற்பன்னர் விஸ்வேந்திரன், பொருளாதார ஆலோசனையாளர் கலாநிதி ஜோய் மகேசன் ஆகியோர் இதில் அடங்கினர்.

இந்த அரசமைப்பு சட்ட நிபுணர்கள் ஒகஸ்ட் 2003இன் கடைசிப் பகுதியில் பரிஸ் நகரில் சந்தித்து இடைக்கால நிர்வாக அமைப்பின் வடிவை தயாரித்தார்கள்.

அதன் தயாரிப்பிலோ, ஆக்கத்திற்கான பேச்சுவார்த்தைகளிலோ பங்குபற்ற மதியுரைஞர் அழைக்கப்படவில்லை. கையளிப்புக்கு முன் அதனை அவர் பார்க்கவும் இல்லை.

அதன் முன்னுரையாக விடுதலைப் புலிகளும் ஸ்ரீலங்கா அரசும் ஏன் இந்த இடைக்கால நிர்வாக அமைப்பை ஏற்படுத்துகிறார்கள் என்ற காரணங்கள் விளக்கப்பட்டன. அதையே சிறிய 27 பந்திகள் கொண்டிருந்தன. அடுத்து அமைப்பின் வடிவம் 23 பந்திகளில் அமைந்தது. அவற்றில் பிரதானமானவை வருமாறு:–

* அந்தக் கட்டமைப்பு வடக்கு, கிழக்கின் எல்லா மாவட்டங்களையும் உள்ளடக்கும். அந்த மாவட்டங்களில் வதியும் முஸ்லிம் மக்கள் அதில் தங்களது பங்களிப்புகளுக்காக பங்குபற்றலாம்.

* தேவைக்கேற்றபடியும் இணக்கங்களின் படியும் எத்தனை அங்கத்தினர்களும் நிர்வாக சபைக்கு ஏற்கப்படலாம். அதில் விடுதலைப்புலிகள், ஸ்ரீலங்கா அரசு, முஸ்லிம் மக்கள் நியமித்தவர்கள் உள்ளடங்குவர்.

* விடுதலைப் புலிகள் பெரும்பான்மை பெற்று, வடக்கு, கிழக்குப் பகுதிகளில் வாழும் சிங்கள, முஸ்லிம் மக்களும் சபையில் அங்கம் பெறுவார்கள்.

* தலைவர், பிரதம அதிகாரி பெரும்பான்மை வாக்குகளால் தெரியப்படுவர். அதன்பின் தலைவர் வடக்கு, கிழக்கை நடைமுறைப்படுத்தும் அதிகாரிகளையும் அவருக்குத் துணையானவர்களையும் நியமிப்பார்.

* இந்த இடைக்கால சபை ஐந்து வருடங்களின் பின் பொதுத் தேர்தலால் புதிய அங்கத்தவர்களை தேர்ந்தெடுக்கும்.

* இந்த சபையின் அதிகாரங்களின் கீழ் வசிக்கும் மக்களின் சகல மனித உரிமைகளும் மதிக்கப்பட்டு, ஆக்கப்படும் எந்தச் சட்டமூலமும் சர்வதேச மனித உரிமைகளின் அடிப்படையில் ஏற்படுத்தப்படும்.

* வடக்கு, கிழக்கு நிர்வாகம் எந்த மதத்தைச் சார்ந்ததாகவும் இருக்காது. எந்தச் சமயமும், எந்த மதமும் முன்னுரிமை பெறாது.

* வடக்கு, கிழக்கு நிர்வாக அலகில் எவரும் இன, மத,சாதி அல்லது வேறு ஏதுவான பாகுபாடுகளுக்கும் உள்ளாக்கப்பட மாட்டார்கள்.

* நிர்வாகக் கட்டமைப்புக்கு வடக்கு, கிழக்கு நிர்வாகத்தின் மீது முழுமையான அதிகாரம் இருக்கும். அந்த அதிகாரம் மீள்குடியேற்றம், புனர்வாழ்வு, மீள்கட்டமைப்பு நிர்மாணம், வளர்ச்சி என்ற சகல அங்கங்களையும் உள்ளடக்கும். இந்த அதிகாரம் ஸ்ரீலங்கா அரசு இந்தப் பகுதிகளின் மேல் தற்சமயம் கொண்டுள்ள அதிகாரத்துக்குச் சமனானதாக இருக்கும்.

* எந்த வித பகுதிகளிலோ, முறைகளிலோ இந்த அதிகாரத்தை ஸ்ரீலங்கா அரசு அன்றில் இடைக்கால நிர்வாகம் நடைமுறைப்படுத்தும் என்பவை பேச்சு வார்த்தைகளில் தீர்மானிக்கப்படும்.

* நீதி பரிபாலனம் உட்பட, வடக்கு – கிழக்கின் பரிபாலனத்துக்குத் தேவையான எல்லா நிறுவனங்களும் நிர்வாக சபையால் நிறுவப்பட்டு, மனித உரிமைகள் பிரச்சினைகளை தீர்ப்பது என்பது தவிர, மற்றவை யாவுமே நிர்வாக சபை அமைக்கும் நிறுவனங்களினாலேயே கண்காணிக்கப்படும்.

* நிதி பரிபாலனத்துக்குத் தேவையான நிதிகள், ஸ்ரீலங்கா அரசு இடைக்கால அரசு சமர்ப்பிக்கும் பரிந்துரைகளின் பேரில் வடக்கு கிழக்குக்காக ஒதுக்கப்படும் நிதியிலிருந்து பெறுவதற்கு வழிவகைகள் செய்யும். வடக்கு, கிழக்குக்கான பொது நிதி, வட – கிழக்கின் மீள் கட்டமைப்பு நிதி, விசேட நிதி என்பன போன்ற நிதிக் கட்டமைப்புகளை இடைக்கால நிர்வாக சபை அமைக்கும். (அந்த நிதி கட்டமைப்புகள் எந்த விதங்களிலும், வழிகளிலும் நிதிகளை அரசாங்கத்திடமிருந்து பெற்றுக்கொள்ளும் என்பதை விவரப்படுத்தப்பட்டன.)

* நிதிகளை உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் திரட்டிப் பெறுவதற்கான அதிகாரங்கள்.

* நிதிப் மேற்பார்வைகளுக்காக கணக்காளர்களை நியமிக்கும் அதிகாரம்.

* நிர்வாகங்களுக்காகப் பிரதேச வாரியங்களை அமைக்கும் உரிமைகள்.

* நிர்வாகத்திற்காக, நிர்வாக நிறுவனங்கள், அதன் பணியாளர்கள் யாவருக்கும் உத்தரவிடக் கூடிய உரிமைகள்.

* வட,கிழக்கு பகுதியில் அமைந்த தனியாரினது தவிர்ந்த காணிகளை எவ்வித பாவனைக்கு உட்படுத்துவது எனவும் அவற்றை கையளிக்கும் உரிமையும் அவற்றின் மேற்பார்வைக்காக பிரத்தியேக ஆணைக் குழுவை அமைக்கும் உரிமையும்.

* ஸ்ரீலங்கா அரசும் அதன் இராணுவமும் நிலைக்கொண்டிருக்கும் காணிகளை அரசும் இராணுவமும் மீளக்கையளித்து அவைகளுக்கான நட்டஈடுகளை காணிகளின் உரிமையாளர்களுக்குத் தருவதை மேற்பார்வை செய்யும் உரிமை.

* வடகிழக்கில் கடல் பகுதிகளும், கடல் எல்லைகளினதும் அவற்றின் வளங்களுக்கு மேல் உண்டான பூரண உரிமை.

* வடகிழக்குப் பகுதிகளின் வளங்கள் மேலான பூரண உரிமை.

* வடகிழக்கின் நீர் வளத்திற்கான தேவையான கட்டுமானங்களை இணைந்து ஏற்படுத்திக்கொள்ளுதல்.

* இந்த இடைக்கால நிர்வாக சபையில் இணக்கத்தின் சரத்துக்களின் விளக்கங்களிலோ, நடைமுறைப் படுத்துவது என்ற முறைகளிலோ ஏதாவது சர்ச்சைகளோ, தகராறுகளோ ஏற்படின் அவை தங்களுக்குள்ளேயோ அல்லது நோர்வே ஈடுபாட்டிலோ தீர்த்துக் கொள்ளப்பட முடியாவிட்டால், மூன்று அங்கத்தினர் கொண்ட இணக்கசபைக்குப் பாரப்படுத்தலாம். அதில் ஒவ்வொருவரை ஒவ்வொரு பகுதியும், தலைவரை இருவரும் இணைந்தும் நியமித்தல் வேண்டும். தலைவரை இணைந்து நியமிக்க முடியாவிட்டால் அவர் சர்வதேச நீதி ஆணையத்தின் (International Court of Justice) தலைவரின் அனுசரணையில் நியமிக்கப்படுவார்.

இவை முக்கியமான, தீவிர, புதுமையான, அதேசமயம் வடக்குக் கிழக்கைப் பொறுத்தமட்டில் முழுமையான அதிகாரங்களை கொண்டதாக இருந்தது. பிரபாகரன் அமைத்த குழுவானதால் நோர்வையின் தூதுவர் மூலம் இந்த குழுவின் வரைவு நேரடியாக 01 நவம்பர் 2003இல் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கமிடம் கையளிக்கப்பட்டது.

அவர் அதனைப் பார்வையிட்டுக் கொண்டிருக்க, எண்ணி நான்கு நாள்களில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க எதிர்பார்க்கப்பட்ட படி சிங்கள பேரினவாதத்தின் தூண்டுதலால் ரணிலினது அரசாங்கத்தின் முக்கிய மூன்று அமைச்சர்களை நீக்கி, அரசை முடக்கி, 7 பிப்ரவரி 2004 இல் நாடாளுமன்றத்தைக் கலைத்து, ரணிலின் அரசையும் முடித்தார்.

அடுத்து, பிரிவினைக்கு வித்திடப்படுவதான பிரச்சாரங்களை பேரினவாதம் தேர்தலுக்காக முடுக்கிவிட்டது.

(வளரும்....)

காலைக்கதிர் Kalaikkathir

## ஏழாம் அறிவு நபரால் 22 க்கு ............

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உதவியாளர்கள் மூலம் 22 ஆவது திருத்தம் தொடர்பான விவாதத்தை தடுத்துள்ளமை கவலைக்குரியது என தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ஸ சபையில் தெரிவித்தார்.

சபாநாயகர் தலைமையில் நேற்று வெள்ளிக்கிழமை நாடாளுமன்ற அமர்வு கூடிய போது உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது,

அரசயலமைப்பின் 22ஆவது திருத்தச் சட்டமூல வரைபை இரு நாட்கள் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ள நாடாளுமன்ற அலுவல்கள் தொடர்பான குழுவிலும், கட்சி தலைவர் கூட்டத்திலும் தீர்மானிக்கப் பட்டது.

இருப்பினும் எடுக்கப்பட்ட தீர்மானத் துக்கமைய வியாழக்கிழமை திருத்தச் சட்டமூல வரைவு விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை.

22ஆவது திருத்தச்சட்ட மூல வரைவில் இரட்டை குடியுரிமை உள்ளவர் அரசியலில் அங்கம் வகிக்க தகுதியற்றவர் என குறிப்பிட்டுள்ளதால் ஆளும் தரப்பின் ஒருசிலர் அதற்கு எதிராக செயற்படுகிறார்கள்.

அரசமைப்பின் 22ஆவது திருத்தச் சட்டமூல வரைவை விவாதத்துக்கு எடுத்துக் கொள்வதை அரசாங்கம் ஒருவார காலத்துக்கு பிற்போட்டுள்ளது.

இத்தீர்மானத்தை அரசாங்கம் தன்னிச்சையாக எடுத்துள்ளது. ஏழாம் அறிவுடையவரின் தேவைக்காக நாடாளுமன்றத்தை கூட்டி நாட்டு மக்களின் நிதியை வீண்விரயமாக்க வேண்டாம். - என்றார்.

## பிணங்களின் மேல் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமர்வில் உரையாற்றிய அவர் மேலும் தெரிவிக்கையில் -

நாம் தேர்தலை நடாத்தக் கோருகின்றோம். அப்போது தான் மக்களின் மன நிலை உங்களுக்குத் தெரியும். பிணங்களின் மேல் நின்று, இரத்த ஆற்றில் ஆட்சி செய்ய நீங்கள் முயற்சி செய்கிறீர்கள்.

நாட்டை வழி நடத்த தெரியாமல் வன்முறை மூலம் மக்களை அடக்கப் பார்க்கிறீர்கள். மக்களின் மனதை வென்று ஆட்சி செய்ய வேண்டும்.

நாளுக்கு நாள் வர்த்தமானி வெளியிடுதல், அதை மாற்றுதல், விலைகளை அதிகரித்தல் இதைத் தான் இந்த அரசு செய்கிறது.

நாட்டில் திடமான திட்டம், முறைமை இல்லை. உள்ளூர் உற்பத்தியாளர்களை கைகழுவி விட்டுவிட்டு, சீனாவுக்கு இங்கே சந்தை அமைத்துக் கொடுக்கின்றனர். - என்றார்.

## ஜெனிவாவில் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இது பலத்த அடியாகும் எனவும் எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

வரலாற்றில் முதல் தடவையாக பொருளாதாரக் குற்றங்கள் தொடர்பான பிரேரணை மனித உரிமைகள் பேரவையில் முன்வைக்கப்பட்டுள்ளதாக தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், வாக்களிப்பில் இருந்து விலகிய நாடுகளை வெற்றிகொள்ளும் வேலைத்திட்டமொன்று அரசாங்கத்திடம் இருக்கவில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

## இலங்கையை ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்றத்தில் நேற்று விசேட கூற்றொன்றை எழுப்பி உரையாற்றும் போதே அவர் இதனை தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில் -

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட பிரேரணையின் போது எமக்கு ஆதரவாக ஏழு நாடுகள் வாக்களித்திருந்தாலும் கூட, இலங்கையின் மிக முக்கிய நட்பு நாடுகளாக கருதும் கத்தார் மற்றும் ஐக்கிய அரபு இராச்சியம் ஆகிய இரு நாடுகளும் வாக்களிப்பிலிருந்து விலகிக்கொண்டுள்ளன. அதேபோல் ஆசிய நாடுகள் எப்போதுமே எம்முடன் இருந்தனர். ஆனால் இம்முறை இந்தோனேசியா, மலேசியா ஆகிய நாடுகளும் எமக்கு ஆதரவு தெரிவிக்கவில்லை. இந்த மாற்றங்களுக்கு காரணம் என்னவென நாம் ஆராய வேண்டும்.

குறிப்பாக நாம் கம்பீரமாக கொடுக்கும் வாக்குறுதிகளை இலகுவாக மீறுகின்றமையே இதற்கு பிரதான காரணமாகும். பயங்கரவாதத்தடை சட்டத்தை மாற்றுவோம், அடிப்படை பிரச்சினைகளில் மாற்றங்களை கொண்டுவருவோம் என முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ முதற்கொண்டு சகலரும் வாக்குறுதிகளை வழங்கியும், கொடுத்த வாக்குறுதிகளை முழுமையாக மீறியுள்ளோம். அதுமட்டுமல்ல உண்மைகளை கண்டறிய தேசிய பொறிமுறையொன்றை உருவாக்குவோம் என புதிய வாக்குறுதியும் தற்போது கொடுக்கப்பட்டுள்ளது. ஆனால் இதற்கு முன்னர் கொடுத்த வாக்குறுதிகளை முழுமையாக மீறியுள்ள நிலையில் இப்போது எதிர்காலம் குறித்து கொடுக்கும் வாக்குறுதியை யார் ஏற்றுக்கொள்ளப்போவது என்ற கேள்வி எழுந்துள்ளது என்றார்.

## ஏ.எல்., புலமைப் பரிசில் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

2022 ஆம் ஆண்டுக்கான தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சை டிசம்பர் 18 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் என பரீட்சை திணைக்களம் தெரிவித்துள்ளது.

## வவுனியாவில் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வவுனியா மாமடு பகுதியில் உள்ள குளத்தில் தாமரைப் பூ பறிக்க சென்ற பெண் மீது மின்னல் தாக்கியதில் குறித்த பெண் சம்பவ இடத்திலேயே பலியாகியுள்ளார்.

வவுனியா, மாமடு, அட்டமஸ்கட பகுதியை சேர்ந்த 50 வயதுடைய ஆ.ஏ.சந்திரலதா என்ற குடும்ப பெண்ணே இச் சம்பவத்தில் பலியாகியுள்ஸார்.

## நட்பு நாடுகள் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அளிக்கும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவைக்கு முன்னால் எமது நாடு எதிர் கொண்டுவரும் நெருக்கடி என்னவென்பது எமக்கு நன்றாகத் தெரியும். அத்துடன் மனித உரிமைகள் குறித்து நாம் பின்பற்றுகின்ற வேலைத்திட்டங்களின் முன்னேற்றங்கள் மற்றும் அதன் பெறுபேறுகளை பெற்றுக்கொள்வதில் உள்ள சிக்கல்கள் குறித்தும் நன்கு அறிவோம்.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, விடுதலைப்புலிகள் இயக்கத்தை சார்ந்த கைதிகள் பலரை விடுதலை செய்தார். எஞ்சியுள்ள சிறைக்கைதிகளை விடுதலை செய்வது குறித்து தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் தெளிவான ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன. அவற்றை அமைச்சர் அலி சப்றியும் ஜெனிவாவில் தெளிவாக விளக்கப் படுத்தினார். அதேபோல் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை மாற்றியமைக்கும் முயற்சியிலும் தற்போது சட்டமூலம் தயாரிக்கப்பட்டு அமைச்சரவை அனுமதியும் கிடைக்கப்பெற்று, அதனை சட்டமாக்கும் நடவடிக்கைகள் நீதி அமைச்சரினால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இப்போது மட்டுமல்ல இதற்கு முன்னரும் எமது நட்பு நாடுகள் பல எமக்கு ஆதரவாக ஜெனிவாவில் வாக்களிக்கவில்லை. இது இலங்கை மீதான மனஸ்தாபத்தில் அல்ல. அந்தந்த நாடுகள் அவர்களின் கொள்கைத்திட்டத்திற்கு அமையவும், சர்வதேச தீர்மானங்களுக்கு அமையவும் முடிவுகளை எடுப்பார்கள். ஆனால் அதற்காக இலங்கை தனித்துவிடப்பட்ட நாடல்ல. சகல நாடுகளுடனும் எமது நட்புறவை நாம் பேணி வருகின்றோம். அதன் பலாபலன்களை நாம் அடைகின்றோம். இந்த நாடுகள் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இலங்கையுடன் முன்னெடுக்கும் வர்த்தக மற்றும் உதவித்திட்டங்களை நிறுத்திக் கொள்ளவில்லை.

அதுமட்டுமல்ல நாம் அனைவரும் மகிழ்ச்சியடையக்கூடிய ஒரு விடயம் என்னவென்றால், ஆயுதக் குறைப்பு மற்றும் சர்வதேச பாதுகாப்பு தொடர்பான விடயங்களைக் கையாளும் ஐக்கிய நாடுகள் சபையின் முதலாவது குழுவானது இலங்கையின் தூதுவரும் ஐக்கிய நாடுகள் சபைக்கான நிரந்தரப் பிரதிநிதியுமான மொஹான் பீரிஸை அதன் தலைவராக நியமித்தது.ஆகவே ஐக்கிய நாடுகள் சபை எமக்கு எதிராக செயற்படவில்லை. மாறாக ஒருசில விடயங்களை நாம் எதிர்கொள்கின்றோம், அதை தாண்டி எம்மை எதிரியாக எவரும் கருதவில்லை. - எனவும் தெரிவித்தார்.

## குருந்தூர்மலையில் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று நாடாளுமன்றத்தில் குற்றம் சுமத்தினார்.

ஏற்கனவே அங்கு நிர்மாணிப் புக்கள் எதனையும் மேற்கொள்ளக் கூடாது என்று நீதிமன்றம் கூறி யுள்ள போதும், அங்கு நீதிமன்றத்தை மீறி செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இந்த நிலையில் பிரச்சினைக்கு தீர்வு காண அனைத்துதரப்பினரையும்கொண்டு பேச்சுவார்த்தை நடத்தவுள்ளதாக அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க உறுதியளித்திருந்தார்.

அது வரையில் குருந்தூர்மலையில் எவ்வித செயற்பாடுகளும் மேற்கொள்ளப் படாது என்று அவர் குறிப்பிட்டிருந்தார். எனினும் நாடாளுமன்ற சபையில் மேற்கொள்ளப்பட்ட இந்த உறுதிமொழியை மீறிஇன்றுகொழும்பில்இருந்துநிலஅளவை திணைக்கள அதிகாரிகள், குருந்தூர் மலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

இது நீதிமன்ற உத்தரவை மாத்திரம் அல்ல, நாடாளுமன்ற சபையின் உறுதிமொழியையும் மீறும் செயல் என்று கஜேந்திரகுமார் பொன்னம்பலம் குறிப்பிட்டார். எனவே இந்த விடயத்தில் பிரதமர் கவனம் செலுத்தி உறுதிமொழிகளை நிறைவேற்ற வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார்.

இதன்போது கருத்துரைத்த நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ், நாட்டின் பல பகுதிகளிலும் உள்ள இந்துக் கோயில்கள் தொடர்பில் எவரும் பிரச்சினைகளை எழுப்புவதில்லை.

எனினும் வடக்குகிழக்கில் உள்ள பௌத்த விஹாரைகள் பற்றி, தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு பிரச்சினைகளை எழுப்பி வருவதாக குற்றம் சுமத்தினார்.

அதுவும், ஜெனீவா அமர்வுவரும்போதே இவ்வாறான பிரச்சினைகள் முன்வைக்கப்படுவதாக அவர் குற்றம் சுமத்தினார்.

இதற்கு பதிலளித்த கஜேந்திரகுமார் பொன்னம்பலம், இது நீதிமன்ற உத்தரவுடன் தொடர்புடையது, இதனை நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ ஏற்றுக்கொள்ளவில்லை என்றாலும், இந்த சபையில் அளிக்கப்பட்ட உறுதிமொழியும் இன்று மீறப்பட்டுள்ளமையை தாம் பிரதமரிடம் சுட்டிக்காட்டியுள்ளார் என கஜேந்திரகுமார் பொன்னம்பலம் குறிப்பிட்டார்.

## ஓட்டோச் சாரதி .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்.போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவர் நேற்று முன்தினம் இரவு கொக்குவிலில் பகுதியில் இருந்து அச்சுவேலியில் உள்ள தனது வீடு நோக்கி ஓட்டோவில் சென்று கொண்டிருந்த போது மூன்று மோட்டார் சைக்கிளில் வந்த 06 பேர் கொண்ட வன்முறை கும்பல் ஒன்று அவரை வழிமறித்து வாளினால் வெட்டி விட்டு அங்கிருந்து தப்பி சென்றுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது. சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## இந்திய எல்லைக்குள் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாரும்இல்லைஎனஅறிவிக்கப்பட்டுள்ளது.

இதேநேரம் 6ஆம் திகதி பகல் ஒரு மணியளவில் அகதிகள் ஆறுபேரும் நின்ற திடலிற்கு இலங்கை கடற்படைக்குச் சொந்தமான ஓர் படகு பயணித்து அப் படகில் இருந்த இலங்கை கடற்படையினர் தரை இறங்கியபோது பயணித்த 6 அகதிகளில் ஒருவர் இந்தியத் திசையை நோக்கி ஓடியுள்ளார். இதன்போது இலங்கை கடற்படையினர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர் என்று பின்னர் தமிழகம் சென்றடைந்த மற்ற அகதிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில் எஞ்சிய 5பேரையும் 7 ஆம் திகதி காலை 11 மணியளவில் இந்தியக் கரையோர காவல்படை மீட்டு இராமேஸ்வரம் கொண்டு சென்றதாகவும் ஆறாவது நபர் தொடர்பில் தகவல் ஏதும் இல்லையெனவும் தமிழக செய்திகள் தெரிவிக்கின்றன.






காலைக்கதிர் Kalaikkathir

# முல்லைத்தீவு மாவட்ட மீனவர்கள் தாக்கப்பட்டமைக்கு வடமாகாணக் கடற்றொழிலாளர் இணையம் கண்டனம்!

வீதியில் இறங்கிப் போராடிய முல்லைத்தீவு மீனவர்கள் தாக்கப்பட்டமைக்கு, வடமாகாண கடற்றொழிலாளர் இணையம் கண்டனம் வெளியிட்டுள்ளது.

வடமராட்சியில் அமைந்துள்ள தனது அலுவலகத்தில் நேற்று (வெள்ளிக்கிழமை) இடம்பெற்ற ஊடக சந்திப்பில் வடமாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் தலை வர் காத்தலிங்கம் அண்ணாமலை இந்தக் கண்டனத்தைப் பதிவு செய்தார்.

எதிர்வரும் 9ஆம் திகதி இந்தத் தாக்குதலுக்கு நல்ல பதில் தருவதாக அதிகாரிகள் மற்றும் துறை சார்ந்தவர்கள் உறுதியளித்தனர் எனவும் அவர் குறிப்பிட்டார்.

அத்துடன், மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு தீர்வு எட்டப்படாத நிலையில், வடக்கு மாகாணம் தழுவிய போராட்டம் முன்னெடுக்கப்படுமென எச்சரித்தார்.

இதேவேளை மண்ணெண்ணெய் விநியோகம் வாரத்திற்கு ஒரு தடவை மாத்திரம் 29 லிற்றர் வழங்கப்படுவதாகவும் அது ஒரு நாளுக்கு மாத்திரமே போதுமானதாக உள்ளதாகவும் சுட்டிக்காட்டினார்.



# அரச நிதி சபை விசாரணையில் ஹர்ஷ தன்னிச்சையாகச் செயற்பட்டுள்ளாராம்!

## அனுபா பாஸ்குவல் குற்றச்சாட்டு



நிலக்கரி ஒப்பந்தம் தொடர்பான அரச நிதிச் சபையின் விசாரணையில் அதன் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா தன்னிச்சையாகச் செயற்பட்டுள்ளார் என இராஜாங்க அமைச்சர் அனுபா பாஸ்குவல் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று (வெள்ளிக்கிழமை) உரையாற்றியபோதே அவர் இந்தப் பிரச்சினையை முன்வைத்தார்.

இதன்போது, நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா அதற்கு பதிலளிக்க முற்பட்டபோது, சிறப்புரிமைக் குழுவின் முன் உண்மைகளை முன்வைக்குமாறு சபாநாயகர் தெரிவித்தார்.

சபாநாயகரின் இந்த அறிவிப்பால் அவையில் காரசாரமான விவாதம் இடம்பெற்றது.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, நாடாளுமன்ற உறுப்பினர்களான சமிந்த விஜேசிறி, சந்திம வீரக்கொடி, மஹிந்தானந்த அளுத்கமகே, தயாசிறி ஜயசேகர மற்றும் தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க ஆகியோரும் இந்த உரையாடலில் பங்கேற்றிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# அத்தியாவசிய நுகர்வுப் பொருள்களின் விலையை குறைத்தது லங்கா சதொச!

லங்கா சதொச நிறுவனம் ஆறு அத்தியாவசிய நுகர்வுப் பொருள்களின் விலையை நேற்று (வெள்ளிக்கிழமை) முதல் அமுலாகும் வகையில் குறைத்துள்ளது.

இதற்கமைய ஒரு கிலோகிராம் உள்ளூர் உருளைக்கிழங்கின் விலை 35 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது.

இதன்படி, 430 ரூபாவாக இருந்த ஒரு கிலோகிராம் உருளைக்கிழங்கு தற்போது 395 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்றது.

ஒரு கிலோ கொண்டைக்கடலையின் விலை, 35 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது.

இதன்படி, 685 ரூபாவாக இருந்த ஒரு கிலோ கொண்டைக்கடலை, தற்போது 650 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்றது. ஒரு கிலோகிராம் சிகப்பு பருப்பின் விலை 17 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது.

இதன்படி, 415 ரூபாவாக இருந்த ஒரு கிலோகிராம் பருப்பு தற்போது 398 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்றது.

ஒரு கிலோகிராம் நாட்டு சம்பாவின் விலை 08 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது.

இதன்படி 228 ரூபாவாக இருந்த ஒரு கிலோகிராம் நாட்டு சம்பா 220 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்றது.

இறக்குமதி செய்யப்படும் ஒரு கிலோகிராம் வெள்ளை நாட்டரிசியின் விலை 05 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது.

இதன்படி 179 ரூபாவாக இருந்த ஒரு கிலோகிராம் வெள்ளை நாட்டரிசி 174 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்றது.

ஒரு கிலோகிராம் வெள்ளை சீனியின் விலை 03 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது. இதன்படி 278 ரூபாவாக இருந்த ஒரு கிலோகிராம் வெள்ளை சீனி 275 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்றது.

# நாட்டில் 110 அத்தியாவசிய மருந்துகளுக்கு தட்டுப்பாடு சுகாதார அமைச்சு தகவல்

நாட்டில் 110 அத்தியாவசிய மருந்துகளுக்கு தட்டுப்பாடு நிலவுவதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள மருந்து பற்றாக்குறையை விரைவில் நிவர்த்தி செய்யவுள்ளதாக சுகாதார அமைச்சின் மருத்துவ தொழில்நுட்ப சேவைகள் பிரிவின் பணிப்பாளர் வைத்தியர் அன்வர் ஹம்தானி குறிப்பிட்டுள்ளார்.

மருந்து தட்டுப்பாட்டை தடுக்கும் வகையில் பல புதிய திட்டங்கள் செயற்படுத்தப்பட்டு வருகின்றன எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# மன்னார் புனித சவேரியார் ஆண்கள் பாடசாலையில் சிறப்புற நடந்தன ஆசிரியர், சிறுவர் தின நிகழ்வுகள்!

மன்னார் புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலையில் ஆசிரியர் தினம் மற்றும் சிறுவர் தினம் உட்பட மாணவர் தலைவர்களுக்கான தின நிகழ்வு இனிதே நடைபெற்று முடிந்துள்ளன.

பாடசாலையின் அதிபர் அருட்சகோதரர் ரெஜினோல்ட் தலைமையில் வியாழக்கிழமை இடம்பெற்ற இந்நிகழ்வில், மாணவர்கள் மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் இருந்து ஊர்வலமாக அழைத்து வரப்பட்டு கௌரவிக்கப்பட்டனர்.

அதனை தொடர்ந்து ஆசிரியர்கள் மாலை அணிவிக்கப்பட்டு ஊர்வலமாக அழைத்து வரப்பட்டு கௌரவிக்கப்பட்டனர். அதே நேரம் பாடசாலை ஆசிரியர்களால் ஆசிரியர் கீதம் பாடப்பட்டு சத்தியப்பிர மாணம் மேற்கொள்ளப்பட்டது.

இதனைத் தொடர்ந்து மாணவர்களால் பல்வேறு கலை நிகழ்வுகள் இடம்பெற்ற துடன் 2022 ஆண்டுக்கான புதிய மாணவர் தலைவர்கள் தெரிவு செய்யப்பட்டு கௌரவிக்கப்பட்டனர்.

அத்துடன், 2021ஆம் ஆண்டு இடம்பெற்ற கல்விப் பொதுத் தராதர சாதாரண தர பரீட்சையில் 9ஏ சித்திகளை பெற்ற மாணவர்கள் மற்றும் அவர்களின் பெற்றோர்களை கௌரவிக்கும் நிகழ்வும் இடம்பெற்றது.

நிகழ்வின் இறுதியில் பாடசாலையில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டதுடன் 2021ஆம் ஆண்டு மாணவர் தலைவர்களாகச் சிறப்பாக செயற்பட்ட மாணவர்களுக்கான நினைவு சின்னங்களும் வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.




# மலையகத்தில் 40 வீதமானோர் பட்டினியை எதிர்கொள்கின்றனர்!

## உணவுப் பாதுகாப்பு தொடர்பில் அச்சம்



மலையக பெருந் தோட்டப்பகுதிகளில் 40 வீதமானோர் பட்டினியை எதிர்கொள்வதாக, மனித அபிவிருத்தி ஸ்தாபனத்தின் பணிப்பாளரும், உலக தொழிலாளர் சம்மேளனத்தின் செயலாளருமான கலாநிதி சிவப்பிரகாசம் தெரிவித்துள்ளார்.

கொட்டகலையில் இடம்பெற்ற போசாக்கு மட்டத்தை விருத்தி செய்வதற்கான கருத்து பரிமாற்ற தெளிவூட்டல் நிகழ்வில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அத்துடன், எஞ்சிய 60 வீதமானோர் ஒருவேளை அல்லது இரு வேளை உணவையே எடுத்துக்கொள்கின்றனர் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

கர்ப்பிணி தாய்மார், பாலூட்டும் தாய்மார் மற்றும் சிறார்களின் உணவு உட்கொள்ளல் நிலைமை மோசமாக உள்ளதாகவும் அவர் கூறினார்.

மலையக பிரதேசத்தில் போசாக்கு மட்டம் மிகவும் குறைவாக காணப்படுகின்ற நிலையில், 6 பிரதேசங்களில் மனித அபிவிருத்தி தாபனம் போசாக்கு திட்டத்தை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

மனித அபிவிருத்தி தாபனத்தின் நிறைவேற்று பணிப்பாளர் பி.பி.சிவப்பிரகாசம் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதம அதிதியாகப் பிரதேச செயலாளர் விதுர சம்பத் கலந்து கொண்டதோடு, பிரதேச கிராம சேவகர்கள், பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியத்தின் அதிகாரிகள், பிரதேச அபிவிருத்தி அதிகாரிகள், சிறுவர் பராமரிப்பு அபிவிருத்தி அதிகாரிகள், சமூக சேவையாளர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 08.10.2022இல் வெளியிடப்பெற்றது.